விலை: 30.00
பக்கங்கள் : இருபது
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஐப்பசி 28 வெள்ளிக்கிழமை (13.11.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 330

MoneyGram
Ria
WESTERN UNION WU
Moving Money for better
உறவுகளிடமிருந்து Western Union, MoneyGram, Ria மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள...
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப...
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 2670 Fax: 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:Srimurugan09@gmail.com

## வீட்டுச் சுவர் சரிந்ததில் 8 வயது சிறுவன் பலி

### கிளிநொச்சியில் சம்பவம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட தொண்டமான்நகர் பகுதியில் வீட்டுச் சுவர் 19

வெலிக்கடை, போகம்பர, மாத்தறையைத் தொடர்ந்து

## பூசா சிறைச்சாலையிலும் கொரோனா தொற்று

(கொழும்பு)

பூசா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளில் சிலருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப் பட்டுள்ளது. 19

## வாக்கெடுப்பின்றி நிறைவேறியது ஒதுக்கீட்டு சட்டமூலம்

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் 2020 ஒதுக்கீட்டு 19

## சனி, ஞாயிறு ரயில் சேவைகள் நடைபெறாது

(கொழும்பு)

மாகாணங்களுக்கு இடையேயான தொடருந்து சேவைகள் நாளை சனிக்கிழமையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமையும் இடம்பெறாது என்று அறிவிக்கப் பட்டுள்ளது. 19

## கொரோனா வைத்தியசாலையில் பாதுகாப்பில் ஈடுபட்ட 9 விமானப் படையினருக்கு வைரஸ் தொற்று

(கொழும்பு)

தொம்பே பிராந்திய மருத்துவமனையில் கொரோனா சிகிச்சை பிரிவில் காவல் கடமையிலிருந்த 9 விமானப் படையினர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

தொம்பே பிராந்திய மருத்துவமனையில் உள்ள இரண்டு கொரோனா கிசிச்சை விடுதிகளில் 17 விமானப் படையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். அவர்களில் 9 பேரே தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

கடந்த மாதம் 25ஆம் திகதி முதல் விமானப் படையினர், மருத்துவமனைப் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த 9ஆம் திகதி விடுமுறையிலிருந்து திரும்பிய விமானப் படை வீரர் ஒருவருக்கு நடத்தப்பட்ட பி.சி.ஆர் சோதனையில் அவருக்கு தொற்று உறுதியானது.

இதையடுத்து, ஏனையவர்களிற்கும் நடத்தப்பட்ட பிசிஆர் சோதனையில் 9 பேர் தொற்றுடன் இருப்பது உறுதியானது.

கொரோனா தொற்றிற்குள்ளான சிப்பாய்கள் மினுவாங்கொட மருத்துவமனையின் கோவிட் வார்டில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். (ம-3)

நீங்கள் வேலை தேடுபவரா?
வேலைவாய்ப்பு
இன்றைய வலம்புரி இல்

## ஊஞ்சல் கயிறு சிக்கியதில் 7 வயது சிறுமி உயிரிழப்பு

### நல்லூர் கோவில் வீதியில் சம்பவம்



(யாழ்ப்பாணம்)

ஊஞ்சல் கயிறு கழுத்தில் சிக்குண்டதால் மயக்கமடைந்த சிறுமி சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று உயிரி 19

## வீட்டிலிருந்து அமைதியான முறையில் தீபாவளியை கொண்டாடுங்கள்

### இந்து மதத் தலைவர்கள் கூட்டாக அழைப்பு

(யாழ்ப்பாணம்)

தீபாவளியை இந்துக்கள் வீடுகளில் இருந்து இறைவனைப் பிரார்த்தித்து கொண்டாடுங்கள்.

கொடிய கொரோனா நோயிலிருந்து நாம் விடுபட வேண்டும் என இறைவனை பிரார்த்தித்து வீட்டிலிருந்து அமைதியான



19

## நெல்லியடியில் தம்பதியரின் தங்கச் சங்கிலி அறுப்பு

### தீபாவளிக்கு புடவை எடுத்துவிட்டு திரும்பியபோது சம்பவம்

(கரணவாய்)

தீபாவளி தினத்துக்கு புடவை எடுத்துக் கொண்டு வீடு திரும்பிய தம்பதியரின் 19

## கொரோனா அபாய வலயமான வெளி மாகாணத்திலிருந்து அனுமதியின்றி யாழ். வந்த முதியவரின் சடலம்

### இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட 14 குடும்பங்கள் தனிமைப்படுத்தலில்

(யாழ்ப்பாணம்)

கொரோனா அபாயமுள்ள வெளிமாகாணமொன்றில் உயிரிழந்த முதியவரின் உடல் உரிய அனுமதிகளின்றி யாழ்ப்பாணத்திற்கு கொண்டு வரப்பட்டதால், அவரது இறுதிச் சடங்கில் பங்கேற்றவர்கள் தனிமைப்படுத்தப் பட்டுள்ளனர்.

ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட எழுவைதீவு பகுதியில் இந்த சம்பவம் நடந்துள்ளது.

இதையடுத்து, ஊர்காவற்றுறை சுகாதார 19

## யாழ்.நகரில் பிரபல ஹோட்டல் சுகாதார பிரிவால் பூட்டு

### முன் அனுமதி பெறாமல் திருமணம் நடத்த அனுமதித்தார்களாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் உள்ள தனியார் ஹோட்டல்ஒன்றில் சுகாதார பாதுகாப்பு நடை 19

## கொரோனாவால் மேலும் 2 பேர் பலி

### உயிரிழப்பு 48 ஆக உயர்வு

(கொழும்பு)

நாட்டில் கோவிட்-19 நோயால் மேலும் இருவர் நேற்று உயிரிழந்துள்ளனர். 19

## நாட்டில் நேற்றும் +373 தொற்றாளர்கள்

(கொழும்பு)

நாட்டில் நேற்றும 373 பேர்கொரோனா 19



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம்
29 . 07 . 1930

மறைவு
12 . 11 . 2020

# திரு. கோணையா தியாகராசா

**( ஓய்வுபெற்ற பிரதம தபால் அத்தியட்சகர், அகில இலங்கை சமாதான நீதவான், முன்னாள் பொருளாளர் - இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், முன்னாள் பிரதித் தலைவர் - புனித சம்பத்திரிசியார் கல்லூரி பழைய மாணவர் சங்கம், முன்னாள் பொருளாளர் - AROD, முன்னாள் தலைவர் - கொய்யாத்தோட்ட சனசமூகநிலையம், தலைவர் சுண்டிக்குளி தெற்கு ஐக்கிய நாணய சங்கம், தலைவர் - கொய்யாத்தோட்ட சேமிப்புக் கழகம், தலைவர் - கொய்யாத்தோட்ட சமூக அபிவிருத்தி மன்றம், தலைவர் - J/ 66 முதியோர் சங்கம், UPTORA Patron - Union of post and telecommunication officers retired association )**

யாழ்ப்பாணம், கொய்யாத்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு. கோணையா தியாகராசா நேற்று (12.11.2020) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கோணையா - மரகதம் தம்பதியரின் ஏகபுதல்வனும் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - மனோன்மணி தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற நாகரெட்ணாம்பாளின் அன்புக் கணவரும் ஜெகநாதன் (முன்னாள் பொறியியலாளர் - மட்டக்களப்பு மாநகரசபை, UK), ஜெயராணி, குகதாசன் (Business, Colombo), ஜெயக்குமார் (முன்னாள் மேற்பார்வையாளர் - K.K.S Cement Factory, France), ஜெயசோதி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், செல்வநாயகி (முன்னாள் உத்தியோகத்தர் - யாழ். மாநகரசபை, UK), சின்னையா (ஓய்வுபெற்ற லிகிதர் - K.K.S Cement Factory), கீத்தா (Retired Personal Assistant - Ministry of Foreign Affairs), சந்திரகுமாரி (France), ஜெயக்குமார் (Teacher - St' Patrick's College, Jaffna) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற மகாதேவி, புனிதவதி (France), காலஞ்சென்ற இராமநாதன், Dr.பூலோகநாதன் (UK), காலஞ்சென்ற கைலைநாதன் ; பாலாம்பிகை (UK) ஆகியோரின் மைத்துனரும் ஸ்ரீ சஜனா - ராஜராஜன் (Engineer - UK), ஸ்ரீ குகனியா - ஜேம்ஸ் (UK), Dr. நிலக்ஷன் (UK), நிலானி - நிசான் (Business), நிசாந்தன் (Accountant, Australia) - அபர்ணா ( Business, Australia), நிசாந்தினி (Engineering Assistant - Waterboard)- அருள்குமரன் (Engineering Assistant - Waterboard), விஷ்னி (Senior Business Analyst - Commonwealth Bank,Australia)- அமிர்த்தன் (Business Development Manager- Digital Armour,Australia), கவித்திரா (Accountant,France)- துஷியந்தன் (Accountant,France), மயூரி (Engineer, U.K) - ரதீபன் (Engineer, U.K), கஸ்துாரி (Assistant Lecturer - Faculty of Agriculture, University of Jaffna) ஆகியோரின் பேரனும் சங்கவி, கிரிசாந்த், ஜஸ்மின், ஜெசிக்கா, தரஞ்சன், கெஷ்வின், நிர்த்துலா, சுவராகினி, சாகித்தியன், ஆதவன் ஆகியோரின் பாசமிகு பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.11.2020) வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் பிற்பகல் 2.00 மணிக்கு துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இல. 25, புது வீதி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.

021 222 6896, 077 332 4646, 077 618 4646, 077 677 9274

தகவல்: குடும்பத்தினர்

(4635)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதியொதுக்கீட்டு சட்டமூல வாக்கெடுப்பை புறக்கணிக்கவுள்ள கூட்டமைப்பினர்

(கொழும்பு)

2020ஆம் ஆண்டு நிதியொதுக்கீட்டு சட்டமூலம் மீதான வாக்கெடுப்பைப் புறக்கணிப்பதற்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது.

குறித்த சட்டமூலம், பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டது. இது தொடர்பாக உரையாற்றிய தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "இந்தச் சட்டமூலம், "விசித்திரமானது" என்றும் நாட்டில் பல்வேறு சட்டவிரோதச் செயற்பாடுகளை, இது மூடிமறைக்கும் செயலாக அமைந்துள்ளது.

நாட்டின் நிதிகளை நிர்வகிப்பதற்கும் ஒருங்கிணைந்த நிதியிலிருந்து நிதியைப் பெறுவதற்கு நிர்வாக ஒப்புதல் அளிப்பதற்காகவும், இந்தச் சட்டமூலம், ஒரு நிதியாண்டுக்கு முன்னர் விவாதிக்கப்படல் வேண்டும்.

2020 நிதியாண்டில், எந்தவொரு சட்டமும் நிறைவேற்றப்படவில்லை என்றும் அங்கீகரிக்கப்பட்டவையும் சில தீர்மானங்கள் மாத்திரமே இத்தகையை தீர்மானங்கள், பொது சேவைகளுக்கு மாத்திரமே நிதி வரைவுக்கான ஒப்புதலை வழங்குகின்றது வளர்ச்சி நோக்கங்களுக்காக அல்ல.

இந்நிலையில், அபிவிருத்தி பணிகளை மேற்கொள்வதற்கு, இந்த அரசாங்கம் அரசமைப்பை மீறியுள்ளது என்றும் 2020ஆம் ஆண்டு நிதியொதுக்கீட்டு சட்டமூலத்தின் மூலம், சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு, அரசாங்கம் ஒப்புதல் அளிக்க முயல்கின்றது.

இதனால், இந்த நிதிச் சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கலந்து கொள்ளாது என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-4)

# பண்டிகைக்கால சுகாதார வழிகாட்டல்கள்

(கொழும்பு)

எதிர்வரும் 14ஆம் திகதி வரவிருக்கும் தீபாவளிப் பண்டிகை தொடர்பாக சுகாதார அமைச்சு விசேட சுகாதார வழிகாட்டல்களை அறிவித்துள்ளது.

இதன்படி சமய வழிபாடுகள், பூஜைகள், சமூக ஒன்றுகூடல்கள், தோட்டப்பகுதிகள் மற்றும் கிராமங்களில் ஒன்றுகூடுதல் போன்ற நடவடிக்கைகளுக்கான அனுமதி வழங்கப்படவில்லை.

அத்தோடு, தீபாவளி பண்டிகைக்கு மேற்கு மாகாணத்தைச் சேர்ந்த பலர் நாட்டின் பிற பகுதிகளுக்குச் செல்ல வாய்ப்புள்ளதால், மேல் மாகாணத்திலிருந்து எவரும் வெளியேற முடியாத வகையில் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் அசேல குணவர்தன தெரிவித்தார்.

இதேவேளை, அனைவரும் சமூகப் பொறுப்புடன் அமைதியாக வீட்டிலிருந்து தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாட வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார். (நி-4)


# மரண அறிவித்தல்

## திருமதி ஈஸ்வரபாலன் வசந்தா



**தோற்றம்** 30.11.1968 **மறைவு** 12.11.2020

சண்டிலிப்பாய் மேற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஈஸ்வரபாலன் வசந்தா நேற்று 12.11.2020 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் கனடாவில் வசிக்கும் இராசாதவமணி தம்பதியரின் மூத்த மகளும் காலஞ்சென்ற இரத்தினம் மற்றும் பாக்கியவதி (பளை) தம்பதியரின் அன்பு மருமகளும் ஈஸ்வரபாலனின் (இளைப்பாறிய புகையிரத ஊழியர்-பளை) அன்பு மனைவியும் கவிற்றி (கனடா), சுதர்சன் (பட்டதாரி பயிலுநர் பிரதேச செயலகம், வலி தென்மேற்கு, சண்டிலிப்பாய்) ஆகியோரின் அன்புத் தாயாரும் கனடாவில் வசிக்கும் விசஜா, சிவகுமார், சுகந்தினி, செல்வக்குமார் சத்தியபாமா கண்ணதாசன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் கனடாவில் வசிக்கும் சிவானந்தன் கோமதி, சுதன், வனிதா, முரளி, வில்வராசா, வசந்தகுமாரி, குசலகுமாரி, லிங்கேஸ்வரபாலன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் அமரர்களான இராமலிங்கம், நடராசா, நவரத்தினம், கணேசராசா, சிவகுருநாதன், துரைசிங்கம் ஆகியோரின் பெறாமகளும் அமரர் இராசலட்சுமி மற்றும் செல்லம்மா ஆகியோரின் மருமகளும் கனடாவில் வசிக்கும் துவாரகா, சந்தோஸ், ஆரணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கனடாவில் வசிக்கும் பிரியங்கா, துசிக்கா, காவியன், தாமரை, ஈழநிலா, ஈழவன், கீர்த்தி, கிருத்திகா, ஆதித்தியன் ஆகியோரின் பெரியம்மாவும் கனடாவில் வசிக்கும் கரணி, ஓவியா, இனியா, இனியவன், சண்டிலிமறவன், இயல்வாணன் ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 13.11.2020 வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சண்டிலிப்பாய் மேற்கு,
சண்டிலிப்பாய்.

(4631)

தகவல் குடும்பத்தினர்.
0776218955


# விடுதலைப்புலிகளுக்கு ஆதரவான அதிகாரியை பதவியில் நியமிக்க முடிவெடுத்த ஜோ பிடன்



**(கொழும்பு) ஐக்கிய நாடுகளுக்கான அமெரிக்காவின் முன்னாள் தூதுவர் சுசன் ரைஸை அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள ஜோ பிடனின் மாற்றங்களுக்கான சபைக்கு நியமிக்கவுள்ளதாக சிங்கள ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.**

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக ஜோ பிடன் எதிர்வரும் 2021 ஜனவரி 20 ஆம் திகதி பதவியேற்க உள்ளார்.

இதனையடுத்தே சுசன் ரைஸ் குறித்த மாற்றங்களுக்கான சபைக்கு நியமிக்கப்பட உள்ளதாக குறித்த சிங்கள இணையத்தளம் சுட்டிக்காட்டியுள்ளது.

இவர் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாளர் எனவும் புலிகளுக்கு எதிராக இலங்கைப் படையினர் முன்னெடுத்த போரை நிறுத்த முயற்சித்தவர் எனவும் - இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் யோசனையை கொண்டு வர திட்டமிட்டவர் எனவும் தெரிவித்துள்ளது.

இதேவேளை சுசன் ரைஸ் அமெரிக்க பாதுகாப்பு ஆலோசகர்களில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

# கொழும்பில் தொற்றாளர்கள் அதிகம்

(கொழும்பு)

கம்பஹா மாவட்டத்தில் தொற்றாளர்களின் எண்ணிக்கை எவ்வாறு குறைவடைந்துள்ளது என்பது தொடர்பில் ஆராயப்பட வேண்டும். கம்பஹாவை விட கொழும்பில் தொற்றாளர்கள் அதிகமாக இனங்காணப்பட்டுள்ளதால் அங்கு பி.சி.ஆர். பரிசோதனைகளின் அளவு குறைவடைந்துள்ளதா என்பது வெளிப்படுத்தப்பட வேண்டும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பணிப்பாளர் வைத்தியர் ஹரித் அளுத்கே தெரிவித்தார். கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார். (ஐ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனா கட்டுப்பாட்டுப்பணிகளுக்கு 70 ஆயிரம் மில்லியன் ரூபா செலவு

## பிரதமர் சபையில் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

நாட்டில் இரண்டாம் அலையாக பரவியுள்ள கொரோனா வைரஸ் தொற்றை கட்டுப்படுத்த பாரிய முயற்சிகளை அரசாங்கம் முன்னெடுத்து வருவதாகவும் தொற்று நோயாளிகளை அடையாளம் காணல், தனிமைப்படுத்தல், பரிசோதனைகள் மற்றும் இவை சார்ந்த சேம நலன் நடவடிக்கைகளுக்காக இதுவரை அரசாங்கம் 70 ஆயிரம் மில்லியன் ரூபா அளவில் செலவிட்டுள்ளதாகவும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று 2020 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டு சட்டமூலத்தை சமர்ப்பித்து உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

நிதி அமைச்சர் என்ற வகையில் நான் இந்த ஒதுக்கீட்டுச் சட்டத்தை சமர்ப்பிப்பது இது 11 ஆவது தடவையாக இருக்கின்ற போதிலும் இதுவரை இப் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட ஒதுக்கீட்டுச் சட்டங்களிலும் பார்க்க இது வேறுபட்டுக் காணப்படுகின்றது.

ஏனெனில் இது நான்கு இடைக்கால வாக்குப் பதிவுக் கணக்குகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுச் சட்டமாகவும் இதனுடன் தொடர்புபட்டதாக எமது அரசாங்கத்தின் அரச நிதி முகாமைத்துவம் தொடர்பான கணக்கு அறிக்கையொன்றாகவும் இவ்வொதுக்கீட்டுச் சட்டம் இருக்கின்றது.

நாட்டில் கொரோனாத் தொற்று நோய் பரவலைக் கவனத்திற்கொண்டு தேர்தல் ஓகஸ்ட் மாதம் வரை பிற்போடப்பட்டது. இதனால் ஜனாதிபதியினால் ஜூலை-செப்டெம்பர் காலப்பகுதிக்காக மீண்டுமொரு தடவை இடைக்கால வாக்குப் பதிவுக் கணக்கொன்று அங்கீகரிக்கப்பட்டது.

இடைக்கால வாக்குப்பதிவுக் கணக்குகளுக்குரிய காலப்பகுதியில் 2020 வருடத்திற்கான ஒதுக்கீட்டுச் சட்டமொன்றை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு போதிய காலம் இல்லாதிருந்ததால், 2020 ஓகஸ்ட் மாதம் நிதி அமைச்சர் என்ற வகையில் செப்டெம்பர் மாதம் தொடக்கம் நான்கு மாத காலப்பகுதிக்காக என்னால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால வாக்குப் பதிவுக் கணக்கிற்கு சபை அங்கீகாரம் வழங்கியது. அதற்கமைய, 2020 வருடத்தில் 4 இடைக்கால வாக்குப் பதிவுக் கணக்குகளின் மூலம் அரசாங்க நிதி முகாமை செய்யப்பட்டுள்ளது.

எமது நாட்டினதும் எமது அரசாங்கத்தினதும் விசேட அம்சம் யாதெனில், இலவச சுகாதார மற்றும் சமூக சேம நலனை அடிப்படைக் கொள்கையாக ஏற்றுக் கொண்டுள்ளமையாகும். அதேபோல் கடந்த ஆட்சியைபோல் அல்லாது நாட்டைக் கட்டியெழுப்பும் "சுபீட்சத்தின் நோக்கு" என்ற அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்தினுள் எமது அரசாங்கம் சந்தை வரையறைகளை இனங்கண்டு அரச துறையில் பரந்தளவில் பணிகளை நிறைவேற்றுவதற்கு அர்ப்பணித்துள்ள அரசாங்கமொன்றாகச் செயற்பட்டு வருகின்றது.

எதிர்பாரா இரண்டாவது அலையின் பாதிப்புகளையும் தாங்கிய வண்ணம், உயிரிழப்புகளின் எண்ணிக்கை அதிகமாக இருந்த போதிலும் எம்மைக் காட்டிலும் முன்னணியிலுள்ள பெரும்பாலான நாடுகளுடன் ஒப்பிடும் போது இறப்பு வீதம் 0.3% சதவீதம் என்ற ஆகக்குறைந்த மட்டத்தில் பேணி, நோய் ஒழிப்பிலும் தனிமைப்படுத்தல் தொழிற்பாட்டிலும் எமக்கு முன்னணியில் திகழ்வதற்கு முடிந்திருப்பது இதன் காரணமாகவே. இதற்குப் பிரதான காரணம், எமது நாட்டில் சகல பிரதேசங்களிலும் அமுல் செய்யப்படுகின்ற இலவச சுகாதார முறைமையும் சுகாதார சேவையும் என்பதை நாம் மறந்துவிட முடியாது.

நோயாளிகளை அடையாளம் காணல், தனிமைப்படுத்தல், பரிசோதனைகள் மற்றும் இவை சார்ந்த சேம நலன் நடவடிக்கைகளுக்காக இதுவரை அரசாங்கம் செலவிட்டுள்ள தொகை சுமார் 70 ஆயிரம் மில்லியன் ரூபாவாகும் என அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.(ஜ-4)

# 3.5 கிலோ சூலகக்கட்டியை அகற்றி மருத்துவர்கள் சாதனை



(கல்முனை)

கல்முனையில் பெண்ணொருவரிடம் இருந்து 3.5 கிலோ சூலகக் கட்டியை மருத்துவர்கள் அகற்றியுள்ளனர்.

கல்முனையில் நேற்று டாக்டர் ஜெமீல் ஞாபகார்த்த வைத்தியசாலை மருத்துவர்கள் இந்த அறுவைச் சிகிச்சையினை வெற்றிகரமாக செய்துள்ளனர்.

பெண்ணியல் மகப்பேற்று வைத்திய நிபுணர் டாக்டர் ரசீன் முஹம்மட் மற்றும் மயக்கவியல் வைத்திய நிபுணர் டாக்டர் தவகுமார் உள்ளிட்ட குழுவினர்களே இக்கட்டியினை அகற்றியுள்ளனர். (ஜ-4)

# 5 இறப்புகள் மாத்திரமே கொரோனாவால் ஏற்பட்டவை

## சுகாதார அமைச்சு உறுதிப்படுத்தியது என்கிறார் இராணுவத் தளபதி

(கொழும்பு)

நாட்டில் 5 இறப்புகள் மாத்திரமே கொரோனாவால் ஏற்பட்டவை என சுகாதார அமைச்சின் செயலாளர் உறுதிப்படுத்தியதாக இராணுவத்தளபதிசவேந்திரசில்வா தெரிவித்தார்.

கொரோனா நோயாளிகள் வீடுகளில் இறந்தது குறித்து நேற்று வியாழக்கிழமை கருத்து தெரிவிக்கும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் 5 இறப்புகள் மாத்திரமே கொரோனாவால் ஏற்பட்டவை எனவும் ஏனையவை நாட்பட்ட நோய்களால் ஏற்பட்டவை எனவும் அவர் தெரிவித்தார்.

நாட்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்டோர் ஊரடங்கு மற்றும் முடக்கல் நிலைகளின்போது வீடுகளில் தங்கியிருக்காது தேவையான போது மருத்துவ சிகிச்சை பெற வேண்டும் என்றும் சுட்டிக்காட்டினார். (ஜ-4)

# முதலாவது ட்ரோன் படையணி

(கொழும்பு)

இராணுவத்தில் ட்ரோன் படையணி ஒன்று ஆரம்பிக்கவுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்தார்.

நிலத்தைக் கண்காணிக்கும் விடயத்தில், இந்த ட்ரோன் படையணியின் ஒத்துழைப்பை இராணுவத்தினர் பெற்றுக்கொள்வர் என அவர் சுட்டிக்காட்டினார்.

யுத்தத்தை நிறைவு செய்த நாடு என்ற ரீதியில், நாட்டில் ஏற்படும் அனர்த்த நிலைமைகளைக் கண்காணிப்பதற்காகவும் எதிர்காலத்தில் தேசத்தைப் பாதுகாப்பதற்காகவும் இந்த ட்ரோன் படையணியின் ஒத்துழைப்பை பெற எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் இராணுவத்தி



னரை சகல விடயங்களிலும் பலப்படுத்துவது அவசியம் என்பதுடன், அதற்கான நடவடிக்கை ... என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# வரிப்பணம் கொடுக்க மறுத்தவருக்கு எச்சரிக்கை

(கரணவாய்)

வரிப்பணத்தை கொடுக்காது வரி வசூலிப்பாளர்களுடன் தர்க்கத்தில் ஈடுபட்ட வியாபாரி ஒருவரை பொலிஸார் எச்சரிக்கை செய்து விடுவித்தனர்.

நெல்லியடி மரக்கறி சந்தையில் நேற்று வியாழக்கிழமை மதியம் மரக்கறி ஏற்றிவந்த லொறி உரிமையாளர் ஒருவர் வியாபாரிகளுக்கு மரக்கறிகளை வழங்கிவிட்டு வரிப்பணத்தை செலுத்தாது வரி வசூலிப்பாளர்களுடன் தர்க்கத்தில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் அவரை கடும் எச்சரிக்கை செய்ததுடன் அவரிடமிருந்து வரிப்பணத்தையும்பெற்றுக்கொடுத்தனர்.(5-4-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த ஆண்டில் மீட்சி பெறுவோம்

## நிவாட் கப்ரால் நம்பிக்கை



(கொழும்பு)

**நாட்டின் பொருளாதாரம் இன்று வீழ்ச்சி கண்டுள்ள போதிலும் அடுத்த ஆண்டில் மீட்சி பெறுவோம் என நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் நம்பிக்கை வெளியிட்டார்.**

அத்துடன் நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு வெறுமனே கொரோனா மாத்திரம் காரணம் எனக் கூறிவிட முடியாது. இதற்கு முன்னர் ஆட்சியில் இடம்பெற்ற மோசடிகள், நாசகார வேலைகளும் காரணமாகும் என்றும் அவர் குற்றம்சாட்டினார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை 2020 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டு சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அத்துடன் கடந்த ஐந்து ஆண்டுகளில் கடனுக்கான வட்டியாக மட்டும் 1430 பில்லியன் ரூபாய்கள் மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ளதாகவும், கடந்த ஆட்சியில் ரூபாவின் விலை குறைவடைந்ததனால் 1.772 பில்லியன் ரூபாய்கள் மேலதிக கடனாக அதிகரித்துள்ளது என்றும் சுட்டிக்காட்டினார்.

இந் நிலையில் கொரோனா நிலைமைகளை சரியாக கையாண்டும் மக்களை பாதுகாத்தும் தொற்றுநோய் தாக்கங்களை தவிர்க்க பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளோம்.

அடுத்த ஆண்டு இந்த நெருக்கடிகள் அனைத்தையும் வெற்றி கொள்ளும் ஆண்டாக அமையும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-4)

# இந்த ஆண்டிற்கான வெளிநாட்டுக் கடன்களை செலுத்தி விட்டோம் - பிரதமர் பெருமிதம்



(கொழும்பு)

2020ஆம் ஆண்டிற்கான வெளிநாட்டு கடன்களை அரசாங்கம் செலுத்திவிட்டது என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

2020ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டு சட்டமூலத்தை நேற்று வியாழக்கிழமை பாராளுமன்றில் சமர்ப்பித்து உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கை கடும் கடன் நெருக்கடியில் உள்ளது என்ற எண்ணத்தை ஏற்படுத்துவதற்கு எதிர்க்கட்சியினர் முயற்சிகளை மேற்கொள்கின்றனர் என்றும் எனினும் தற்போதைய நிர்வாகம் கடன் விவகாரத்தினை சிறப்பாக கையாண்டுள்ளது என அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த ஆண்டு நாடு 4200 அமெரிக்க டொலர்களை வெளிநாட்டு கடனாக செலுத்த வேண்டியிருந்தது.

எனவே அந்தக் கடன்களை செலுத்திவிட்டோம் என தெரிவித்தார்.

வலுவான பொருளாதாரத் திட்டங்களை முன்னெடுத்ததன் காரணமாகவே இதனை செய்ய முடிந்தது என்றும் அரசாங்கம் தேவையற்ற இறக்குமதிகளுக்கு தடை விதித்ததுடன், தேவையற்ற வெளிநாட்டு கடன்களை இடைநிறுத்தவும் தீர்மானித்தது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-4)

# அப்பாவின் நினைவு

இம்மைக்கு 08 . 11 . 1936

அம்மைக்கு 05 . 11 . 2018



(திதி: ஐப்பசி அபரபக்க - திரயோதசி)

## பண்டிதர் சிதம்பரப்பிள்ளை வேலாயுதம்

(ஓய்வு நிலை அதிபர்)

உங்கள் பரிசத்தின் உரசலின்றி
ஈராண்டு கடந்தனவே
நினைவுகள் நதியாய்
நீண்டு பயணிக்கிறது
பாரினில் எமக்குப் பாதைகள்
பல செய்தீர்
பாதைகளைச் சீராக்கிப்
பயணிக்க வழி செய்தீர்

கலையாத செல்வம் தந்து
கழியுவகை கொண்டீரப்பா
இதமான எம் வாழ்வில்
இணைந்தே வந்தீரப்பா
காலமெல்லாம் எம்மோடு
கலந்தே வருவீரப்பா
நீள நினைந்திருந்து
நித்தலும் கைதொழுவோமப்பா

(C-669)

"திருத்தணிகை",
வதிரி, கரவெட்டி.

குடும்பத்தினர்

# அடுத்த கட்டத்திற்கு நகர்கிறதா கொரோனா?

## வைத்தியர்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டில் தற்போது கொரோனா வைரஸ் பரவும் தன்மை மற்றும் புதிய கொத்தணிகள் உருவாகின்றமை என்பவற்றை அவதானிக்கும் போது மூன்றாம் கட்டத்திலுள்ள இலங்கை நான்காம் கட்டத்திற்கு செல்வதற்கான சாத்தியம் உள்ளதாக சுகாதார அமைச்சின் பேச்சாளர் வைத்தியர் ஜயருவான் பண்டார தெரிவித்துள்ளார். இதேவேளை நாட்டில் கடந்த காலத்தை விட பல்வேறு இடங்களிலும் கொரோனா கொத்தணிகள் உருவாகும் அபாயத்திற்கு தற்போது முகம் கொடுத்துள்ளதாகவும் நிலைமை மோசமடைவதாகவும் வைத்தியர் ஹரித அளுத்கே தெரிவித்துள்ளார். (நி-4)

# இதுவரை 600 பொலிஸாருக்கு தொற்று

(கொழும்பு)

நாட்டில் இதுவரையில் 600 பொலிஸ் அதிகாரிகளுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தனிமைப்படுத்தல் நிலையங்களில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள சுமார் மூவாயிரம் பொலிஸ் அதிகாரிகளில் இருந்தே இந்தக் கொரோனாத்தொற்றாளர்கள் பதிவாகின்றனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

தற்போது நாட்டில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுப்பதற்கான நடவடிக்கைகளை 87 ஆயிரம் பொலிஸார் இணைந்து மேற்கொண்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டில் இருந்தவாறே கௌரி நோன்பை நிறைவு செய்வோம்





கொரோனா பெருந்தொற்றைத் தடுக்கும் முகமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள சுகாதார நடைமுறைகள் காரணமாக ஆலயங்களில் அர்ச்சகர்கள் தவிர்ந்த பக்தர்கள் கூடுவது தடை செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் கேதாரகௌரிவிரதம் நோற்கப்பட்டு வரும் நிலையில் நாளை 14 ஆம் திகதி சனிக்கிழமை தீபாவளித் தினத்தில் நிறைவடையவுள்ளது.

பொதுவாக வரலக்ஷ்மி விரதம், கேதாரகௌரி விரதம், காரடையா நோன்பு போன்றவை வீடுகளில் செய்யப்படும் விரத வழிபாடுகளே. ஆயினும், இலங்கையில் அவை ஆலய வழிபாடுகளாகவே பெரிதும் இருந்து வருகின்றன.

முக்கியமாக கேதாரகௌரி விரதம் அனுஷ்டிக்கும் பல்லாயிரம் அடியவர்கள் இலங்கையில் உள்ளனர்.

அவர்கள் குறித்த விரத வழிபாடுகளை ஆலயங்களில் சிவாச்சார்யர்களின் வழிகாட்டலிலேயே மேற்கொள்கின்றனர். ஆனால் இம்முறை ஆலய வழிபாடு சாத்தியமாகாத நிலையில் கேதார விரதத்தை வீட்டில் அனுஷ்டிக்க வேண்டிய நிலை உண்டாகியுள்ளது.

இரண்டுகும்பங்களைவைத்து வலது பக்கம் சிவபெருமானையும் இடது பக்கம் பார்வதியையும் கும்பங்களில் எழுந்தருள் செய்து வழிபடலாம்.

இல்லாவிடில் ஒரு கும்பம் வைத்து அதில் அம்பிகையையும் புற்று மண்ணில் லிங்கம் அமைத்து அதில் பரமேஸ்வரனையும் வழிபடலாம்.

அந்த வாய்ப்பும் இல்லாதவர்கள் சிவன்- அம்மன் படத்தை வைத்து விளக்கேற்றி வழிபடலாம்.

இருபத்தொரு முடிச்சிட்ட நோன்பு நூலை லிங்கத்தின் மேல் அல்லது கும்பங்களின் மேல் அல்லது படத்தில் சாற்றி வழிபடலாம்.

சிவபெருமானுக்கு உகந்த அஷ்டோத்திரசத நாமாவளி, லிங்காஷ்டகம் போன்ற சமஸ்கிருத தோத்திரங்களையும் திருமுறை, காப்பு பாடல் போன்றவற்றையும் பாடலாம்.

இருபத்தொரு நாமங்களால் 21 பூக்கள் / வில்வத்தால் அர்ச்சனை செய்தல் வேண்டும்.

பின்பு இறைவன் - இறைவிக்கு தூபம், தீபம் காட்டி நெய்வேதனம் சமர்ப்பிக்க வேண்டும்.

நிறைவாக காப்பை எடுத்து,

"ஆயுஸ்ய வித்யாம்ச ததா சுகம் ச

ஸௌபாக்ய ம்ருத்திம் குரு தேவ தேவ

ஸம்ஸார கோராம்புநிதௌ நிமக்நம்

மாம் ரக்ஷ கேதார நமோ நமஸ்தே"

என்ற சுலோகத்தை சொல்லி பிரார்த்திக்க வேண்டும்.

பின்னர் வீட்டிலுள்ள வயது முதிர்ந்த சுமங்கலிப் பெண் கையால் அல்லது கணவன் கையால் நூலை இடது கையில் பெண்கள் கட்டிக்கொள்ள வேண்டும்.

நிறைவாக, பூஜைக்கான தக்ஷணையை அருகிலுள்ள குருவிடம் அல்லது அந்தணரிடம் சமர்ப்பிக்கலாம். அதுவும் இயலாத போது கோயில் உண்டியலில் சேர்ப்பிக்க வேண்டும். (உடனே சாத்தியமில்லாத போது எடுத்து வைத்து பின் சேர்ப்பிக்கலாம்)

இது ஓரளவு சுலபமாகப் பூஜையை வீட்டில் செய்யும் முறைமை ஆகும். இதற்கும் வசதியற்றவர்கள் திருமுறைகளைப் பாடி வழிபாடு செய்வதும் ஏற்கத்தக்கதே.

கேதாரகௌரியுடன் வந்தருளும் கேதார நாயகர்- அர்த்தநாரீஸ்வர இறை அருளால் நோயும் துயரும் அகலட்டும். இன்பமே பெருகட்டும் என பிரார்த்திப்போம்.

**பிரம்மஸ்ரீ. தியாக. மயூரகிரிக் குருக்கள்.**



வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்களின் கொத்தணியில் மரக்கன்று வழங்கல் நேற்று முன்தினம் புதன்கிழமை தலைவர் செ.செல்வராஜா தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் சங்க நிர்வாக உறுப்பினர்கள்,பொது முகாமையாளர்கள், பணியாளர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டு மரக்கன்றுகளையும் பெற்றுக்கொண்டனர்.(படம்:- விநோஜ்)

## கொவிட் - 19 வைத்தியசாலைக்கு அத்தியாவசிப்பொருட்கள் கையளிப்பு



(கரணவாய்)

மருதங்கேணி கொவிட் - 19 சிறப்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெறுகின்ற நோயாளர்களின் பாவனைக்கென ஒரு தொகுதி உலருணவுகள், அத்தியாவசிய பொருட்கள் உடுதுணிகள், படுக்கை விரிப்புக்கள் அடங்கிய பொதிகளை நெல்லியடி மருதம் பெயின்ற் டீலர்ஸ் நிறுவனத்தின் உரிமையாளர் தயாபரன் வழங்கியுள்ளார்.

இவ் அன்பளிப்புக்கள் மருதங்கேணி கொவிட் -19 சிறப்பு வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி வை.யதுநந்தனிடம் நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டன. (5-4-60)

## வீடுகளில் விற்பனைக்குத்தடை யாழ்.மாநகர முதல்வர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து வீடுகளில் கோழி இறைச்சி விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளதாகவும், தடையை மீறி விற்பனையில் ஈடுபடுவோருக்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்எனவும்யாழ். மாநகர சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. யாழ். மாநகர சபையின் மாதாந்த அமர்வு நேற்று மாநகர முதல்வர் இம்மானுவேல் ஆனல்ட் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது குறித்த விடயம் தொடர்பில் பரிசீலிக்கப்பட்டதோடு இறுதியில் முதல்வரினால் இத்தீர்மானம்அறிவிக்கப்பட்டது.(5-4-33)

## வரவு-செலவுத் திட்டம் நிறைவேற்றம்

(யாழ்ப்பாணம்)

தீவகம் தெற்கு வேலணைப் பிரதேச சபையின் 2021 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஆளுகைக்குட்பட்ட வேலணைப் பிரதேச சபையின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட முன்மொழிவுகளை நேற்று முன்தினம் தவிசாளர் நமசிவாயம் கருணாகரகுருமூர்த்தி சபையில் சமர்ப்பித்தார்.

வரவு - செலவுத் திட்ட முன்மொழிவு கடுமையான வாதப் பிரதிவாதங்களுக்கு பின்னர் நிறைவேற்றப்பட்டது. (5-4)

## கடைகள் மீளக்கையளிப்பு

(கரணவாய்)

,வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையினரால் புதிய சந்தை பகுதியில் உள்ள பத்துக் கடைகள் உப வாடைக்கு கொடுக்கப்பட்டது என தெரிவித்து சீல் வைக்கப்பட்டிருந்தது.

இவ்வாறு சீல் வைக்கப்பட்டு மூன்று மாதங்களான நிலையில் நேற்று பிரதேச சபைத்தவிசாளர் புதிய சந்தை பகுதிக்கு பிரதேச சபை உத்தியோகத்தர்கள் மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணிஉறுப்பினர்களுடன்வருகை தந்து சீல் வைக்கப்பட்ட கடைகளைத் திறந்து உரியவர்களிடம் கையளித்தார். (5-4-60)




சுழிபுரம் வடக்கம்பரை அம்மன் அறக்கொடை நிதியத்தினால் அண்மையில் கொழும்புத்துறை, கொக்குவில், குரும்பசிட்டி, தொல்புரம், காரைநகர், உடுவில், சண்டிலிப்பாய், நவாலி, இனுவில், திருநெல்வேலி ஆகிய பகுதிகளில் மரக்கன்றுகள் மற்றும் வீட்டுத்தோட்ட விதைகள் வழங்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டில் வேலை செய்யும் இலங்கையர்களில் அரசு அதீத அக்கறை கொண்டுள்ளது-வெளிவிவகார அமைச்சர்

(கொழும்பு)

**கொரோனாத் தொற்றுநோய் பரம்பலை அடுத்து, வெளிநாடுகளில் வேலை செய்யும் இலங்கையர் களின் நலன்களை உறுதிப் படுத்த அரசாங்கம் துரித நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக வெளிவிவ கார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.**

நேற்று முன்தினம் ஐக்கிய நாடுகள் சபையின் புலம்பெயர் விற்கான வலைப்பின்னலை ஆரம்பித்து வைக்கும் நிகழ்ச்சி யில் உரையாற்றிய. போது அமைச்சர் இதனைத் தெரிவித் தார்.

கொரோனாத் தொற்றுநோ யின் முதலாம் அலை தாக்கிய சமயம், பிரத்தியேக இணை யத்தளமொன்று ஆரம்பிக்கப் பட்டு, வெளிநாடுகளில் வேலை செய்யும் இலங்கையர்களின் தகவல்கள் திரட்டப்பட்டன.

தற்போது, வேலைக்காக வெளிநாடுகளில் தங்கியி ருக்கும் இலங்கையர்களில் பாதிக்கப்படக்கூடிய நிலையில் உள்ளவர்களுக்கு உதவி செய்ய நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக சுட்டிக்காட்டி னார்.

இவர்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்று வதற்கும் விமானம் மூலம் உலருணவு நிவாரணங் களை அனுப்பி வைப்பதற்கும் தற்காலிக தங்குமிடவசதிகளை வழங்குவதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஜோர்தான், கட்டார் போன்ற நாடுகளில், கொரோனா நெருக் கடியால் வேலைவாய்ப்பு இழந் தவர்களுக்கு வேறு வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக்கொடு க்கவும் நடவடிக்கை எடுக்கப் பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தை தூக்கி நிறுத்த அரசிடம் உள்ள திட்டங்கள் என்ன?

## —கபீர் ஹாசிம் கேள்வி—



(கொழும்பு)

வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தை மேம்படுத்த அரசாங்கத்திடம் என்ன திட் டங்கள் இருக்கின்றன என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம் கேள்வி எழுப்பினார்.

எதிர்க்கட்சித்தலைவர் அலு வலகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இவ்வாறு கேள்வியெழுப்பிய அவர் மேலும் கூறியதாவது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷ கடந்த மார்ச் மாத காலப்பகுதியில் கொரோனாத் தொற்று பரவலை தன்னால் இலகுவில் வெற்றி கொள்ள முடியும் எனக் கூறியிருந்தார். ஆனால் தற்போது வைரஸ் பரவல் யுத்தம் இல்லை என் றும், யுத்தம் என்றால் தான் இலகுவில் வெற்றி கொள் வேன் என்றும் கூறியிருக் கிறார். அவர் வைரஸ் பரவல் தொடர்பில் மக்கள் மீதும் ஊட கங்கள் மீதும் பழி சுமத்துகி ன்றார்.

இவ்வருடத்திலேயே அதிக ளவிலான நெல் அறுவடை செய்யப்பட்டுள்ளது. ஆனால் அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு ள்ளது. வைரஸ் பரவல் கார ணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்க ளுக்கு 10 ஆயிரம் ரூபாய் பெறு மதியான பொருட்கள் அடங்கிய பொதிகளை வழங்குவதாக அரசாங்கம் தெரிவித்தது. அந்த பொதிகளில் 3500 ரூபாய் பெறுமதியான பொருட்களே இருக்கின்றன.

ஆரம்பத்தில் மக்கள் வர்த்தக நிலையங்களிலும் சதொச நிலையங்களிலும் வரிசை யாக நின்றதை அவதானிக்கக் கூடியதாகவிருந்தது. ஆனால் தற்போது தங்க நகையை அடகு வைப்பதற்கு வரிசையில் காத்திருக்கின்றனர் அவர் தெரி வித்தார். (நி-4)

# புலிகள் மீதான தடையை நீக்க வேண்டாம்

## பிரிட்டனிடம் இந்தியா வலியுறுத்து

(கொழும்பு)

பயங்கரவாத அமைப்புக்க ளின் பட்டியலில் இருந்து தமி ழீழ விடுதலைப் புலிகள் அமை ப்பை நீக்கக்கூடாது என்று இந் தியா பிரிட்டனிடம் வேண்டு கோள் விடுத்துள்ளது.

2000 ஆம் ஆண்டளவில் பிரிட்டன் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை பயங்க ரவாத அமைப்புக்களின் பட்டி யலில் சேர்த்தது.

எனினும் யுத்தம் முடிவுக்கு வந்து 10 ஆண்டுகள் கடந்து விட்ட நிலையிலும் நாட்டில் எந்தவிதமான வன்முறை களும் இடம்பெறாததையடுத் தும் புலிகள் அமைப்பின் தடையை நீக்க வேண்டும் என்று கோரப்பட்டது.

அந்த வகையில் புலிகள் மீதான தடையை பிரிட்டன் நீக்கவுள்ளதாக அண்மையில் செய்திகள் வெளியாகியிருந் தன.

இதற்கு இலங்கை வெளி விவகார அமைச்சும் தனது கண்டனத்தை வெளியிட்டிருந் தது.

இவ்வாறான சூழலில் புலி கள் மீதான தடையை பிரிட்டன் நீக்கக்கூடாதென இந்தியா. பிரிட்டிஷ் உள்துறை அமைச் சிடம் கோரிக்கை விடுத்துள்ள துடன் இந்திய முன்னாள் பிரத மர் ராஜீவ் காந்தி மற்றும் ஜனாதிபதி ஆர். பிரேமதாஸ ஆகியோரின் படுகொலைக ளுக்கு புலிகளே காரணம் என் றும் சுட்டிக்காட்டியுள்ளது. (ஜ-4)

# இறக்குமதித்தடையை அரசு நீக்க வேண்டும்

## எதிர்க்கட்சியினர் கோரிக்கை

(கொழும்பு)

நாட்டில் உணவுப்பொருட் களுக்கு விதிக்கப்பட்டுள்ள இறக் குமதித்தடையை அரசாங்கம் நீக்கி அவை நியாயமான விலை யில் மக்களை சென்றடைவதற் கான ஒழுங்குகளை மேற் கொள்ள வேண்டும் என எதிர்க் கட்சித்தலைவரின் இணைப்பு செயலாளர் உமாசந்திர பிரகாஷ் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொரோனா தாக்கத்தின் விளைவாக மக்களின் பொரு ளாதாரம், வாழ்வாதாரம் மற் றும் வாழ்வியலில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு அரசாங்கம் எடுக்கும் அக்கறையை துரி தப்படுத்த வேண்டும் என்று சுட்டிக்காட்டினார்.

கொழும்பு எதிர்க்கட்சி அலு வலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது அவர் இதனைத் தெரி வித்தார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்,

மக்களின் வருமானம் நிரந் தர தொழில், பகுதி நேர தொழில் என பலவாறு தங்கியுள்ளது.

கொரோனா தாக்கத்தின் காரணமாக பலருக்கு தொழில் இழப்பு ஏற்பட்டுள்ள அதே வேளை, நாட்டின் பொருளாதா ரமும் வீழ்ச்சியடைந்துள்ளது.

தற்போது மஞ்சள் அதிக விலைக்கு விற்பனை செய்யப் படுகின்றது.

இதன் காரணமாக சட்ட விரோதமான முறையில் இந் தியாவிலிருந்து இலங்கைக்கு மஞ்சள் கொண்டு வரப்படுகின் றது.



இதனால், கொரோனா தாக் கத்தின் பரவலும் அதிகமாக காணப்படுகின்றது. எனவே, இறக்குமதி தடையை அரசா ங்கம் நீக்கி அதற்கான ஒழுங் குகளை மேற்கொள்ள வேண் டும் என சுட்டிக்காட்டினார். (ஜ-4)

### மேல் மாகாணத்திற்குள் பிரவேசிக்கத் தடை; இராணுவத் தளபதிக்கு அதிகாரம் வழங்கியது யார்?

## சுமந்திரன் கேள்வி



(கொழும்பு)

மேல் மாகாணத்திற்குள் பிரவேசிக்க மற்றும் வெளி யேறத்தடை விதித்து இராணு வத்தளபதி உடன் அமுலுக்கு வரும் வகையில் உத்தரவிட் டதற்கான அதிகாரம் எந்தச் சட்டத்தின் கீழ் வழங்கப் பட்டது என பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கேள்வியெழுப்பினார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றும் போது அவர் இந்தக் கேள்வியை எழுப்பி னார்.

மேல் மாகாணத்திலிரு ந்து வெளியேறும் மற்றும் மேல் மாகாணத்திற்குள் பிர வேசிக்கும் அனைத்து பேரு ந்து சேவைகளும் உடன் அமுலுக்கு வரும் வகையில் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

அத்துடன் எதிர்வரும் 15 ஆம் திகதி நள்ளிரவு 12 மணி வரை இடைநிறுத்தம் தொட ரும் என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா அறிவித்தார்.

இந்த நிலையிலேயே உடன்அமுலுக்கு வரும்வகை யில் இவ்வாறான உத்தரவு களை வழங்கும் அதிகாரம் எந்தச் சட்டத்தின் கீழ் வழங் கப்பட்டது என எம்.ஏ.சுமந்தி ரன் அரசாங்கத்திடம் கேள்வி எழுப்பினார். (ஜ-4)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வைத்தியரை இடமாற்றம் செய்ய வேண்டாம் பணிப்பாளரிடம் வேண்டுகோள்

(அளவெட்டி)

வட்டுக்கோட்டை பிரதேச வைத்தியசாலையில் கடமையாற்றிவரும் வைத்திய கலாநிதி திருமதி.ரதினி காந்த நேசனுக்கு இடமாற்றம் அறிவிக்கப்பட்டதையடுத்து அவரை இடமாற்றம் செய்ய வேண்டாம் என்று சமூக மட்ட அமைப்புகளால் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வரனுக்கு கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

எமது வைத்தியசாலை 1947 ஆம் ஆண்டு தொடக்கம் இது வரை மக்களுக்கு சிறந்த மருத்துவ சேவையை அளித்து வருகின்றது.

இந்த வைத்தியசாலையில் அராலி,துணைவி,சங்கரத்தை, சுழிபுரம் மற்றும் சித்தன்கேணி எனப் பலபகுதி மக்களும் சுகாதார சேவையினைப் பெற்று வருகின்றனர்.


அந்த வகையில் வைத்திய கலாநிதி திருமதி.ரதினி காந்த நேசன் இந்த வைத் தியசாலையைப் பொறுப்பேற்ற பின்னர் வைத்தியசாலையில் மக்கள் சார்பான பல்வேறு புதிய செயற்பாடுகள் இவரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மருத்துவக் கிளினிக், கர்ப்பிணித் தாய்மாருக்கான கிளினிக், சிறுவர் பராமரிப்பு,பல் வைத்திய சேவைகள் என்பன இவரால் திறம்பட செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

எனவே இவரை மேலும் சில வருடங்கள் இவ் வைத்தியசாலையில் பணிபுரிவதற்கு அனுமதிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம் என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் 17 சமூகமட்ட அமைப்புகளைச் சேர்ந்த 1393 அங்கத்தவர்கள் கையொப்பமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-4-104)

# 280 மி.மீ.மழைவீழ்ச்சி வெலிஓயாவில் பதிவு



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின், வெலிஓயா பிரதேசத்தில் கடந்த 9 ஆம் திகதி 280 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

வெலிஓயா பிரதேசத்தில் அதிகளவான மழை வீழ்ச்சியினால் பல குள ங்கள் நிரம்பி வான் பாய்கின்றன. விவசாய நிலங்கள் பல நீரில் மூழ்கியுள்ளன. இதனால் மக்கள் கவலையடைந்துள்ளனர். (5-4-281)

# கேரளக் கஞ்சாவுடன் இருவர் கைது

(மன்னார்)

மடு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மன்னார்-மதவாச்சி பிரதான வீதி, குஞ்சுக்குளம் சோதனைச் சாவடியில் வைத்து காரில் கடத்திச் செல்லப்பட்ட சுமார் 5 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான கேரளக் கஞ்சா பொதிகள் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு 11.30 மணியளவில் மீட்கப்பட்டுள்ளதோடு, இரண்டு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.



மடு பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் குஞ்சுக்குளம் சந்தியில் உள்ள பொலிஸ் மற்றும் இராணுவ சோதனைச் சாவடியில் வைத்து குறித்த வாகனம் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

இதன்போது வாகனத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 5 கிலோ 486 கிராம் கேரளக் கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டன.

மடு பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலுக்கு அமைவாக மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பண்டுல வீரசிங்கவின் பணிப்பில், உப பொலிஸ் அதிகாரி அளுத்கமகே, மடு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ராஜபக்ஷ, உப பொலிஸ் பரிசோதகர் வசந்தகுமார தலைமையிலான குழுவினர் மேற்படி கடத்திச் செல்லப்பட்ட கேரளக் கஞ்சாப் பொதிகளை மீட்டுள்ளனர்.

குறித்த வாகனத்தில் பயணித்த வரகாபொல பகுதியைச் சேர்ந்த 36 மற்றும் 42 வயதுடைய இரு நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்கள் விசாரணைகளின் பின்னர் மடு பொலிஸாரினால் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (5-4-285)

# வவுனியா பிரதேச சபை வரவு-செலவுத்திட்டம் வெற்றி

(நெளுக்குளம்)

வவுனியா வடக்கு பிரதேச சபையின் வரவு-செலவுத் திட்டம் ஒரு மேலதிக வாக்கால் நிறைவேற்றப்பட்டது.

வவுனியா வடக்கு பிரதேச சபை 25 தமிழ், சிங்கள உறுப்பினர்களைக் கொண்டது.

நேற்று 4 சிங்கள உறுப்பினர்கள் சபைக்கு சமுகமளிக்காத நிலையில் வரவு-செலவுத்திட்டம் முன்வைக்கப்பட்டது.

இதன்போது தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினரொருவர் குறைகள் இருப்பதாகவும் ஏற்க முடியாது என தெரிவித்த நிலையில் உறுப்பினர்கள் சிலர் இரகசிய வாக்கெடுப்பு தேவை எனக் கூறினர்.

அதன் பின்னர் இரகசிய வாக் கெடுப்பு தேவையா? என வாக்கெடுக்கப்பட்டது.

அதனையடுத்து இரகசிய வாக்கெடுப்பு எனத் தலைவரால் தீர்மானிக்கப்பட்டது.

இந்நிலையில் வரவு-செலவுத்திட்டம் இரகசிய வாக்கு கெடுப்புக்கு விட்டபோது 21 வாக்குகள் அளிக்கப்பட்ட நிலையில் 11 வாக்குகளைப் பெற்று வரவு-செலவுத் திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. (5-4-299)

# இறந்த நிலையில் யானையின் உடல்

(குருமன்காடு)

வவுனியா, செட்டிகுளம், கப்பாச்சி கிராமத்திலுள்ள குளத்தை அண்டிய வயல் பிரதேசத்தில் இறந்த நிலையில் யானை ஒன்றின் உடல் மீட்கப்பட்டுள்ளது. குறித்த பகுதிக்கு வயல் வேலைக்குச் சென்ற விவசாயிகள் இறந்தயானையின் உடலை கண்டு வனஜீவராசிகள் திணைக்களத்திற்கு தெரியப்படுத்தினர்.

அருகில் இருந்த காட்டில் இருந்து வயல் பிரதேசத்திற்குள் நுழைந்த குறித்த யானை பூச்சித் தாக்கம் காரணமாக இறந்துள்ளதாக வனஜீவராசிகள் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர். இந்நிலையில் இறந்த யானையின் உடலை தகனம் செய்வதற்கான நடவடிக்கைகளை வனஜீவராசிகள் திணைக்களத்தினர் முன்னெடுத்துள்ளனர். (5-250)

# அனர்த்த முகாமைத்துவத்தினரின் முன்னாயத்த கலந்துரையாடல்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் வடகிழக்கு பருவப் பெயர்ச்சி மழையை எதிர்கொள்வது தொடர்பான முன்னாயத்த கலந்துரையாடல் முல்லைத்தீவு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.



கடந்த 2018 ஆம் ஆண்டு இந்த பருவப்பெயர்ச்சி மழை காரணமாக முல்லைத்தீவு மாவட்டம் பல்வேறு அனர்த்தங்களுக்கு முகம் கொடுத்த நிலையில் இவ்வாறான அர்த்தம் தொடர்பிலான முன்னாயத்த கலந்துரையாடலாக இக்கலந்துரையாடல் இடம்பெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் இ.இலிங்கேஸ்வரகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன், மேலதிக அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் மற்றும் பிரதேச செயலாளர்கள், திணைக்களத்தலைவர்கள் விவசாய, நீர்ப்பாசன திணைக்களத்தின் உயர் அதிகாரிகள், பிரதேச சபைகளின் தவிசாளர்கள், செயலாளர்கள் உள்ளிட்ட அரச அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

அனர்த்தம் ஏற்படின் அதை எவ்வாறு எதிர்கொள்வது என்பது தொடர்பிலான கலந்துரையாடலாக இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது. (5-4-28)

# சட்டவிரோத கட்டடங்களை அகற்ற அவகாசம் வழங்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட குருநகர் பகுதியில் வடிகால்களுக்கும் மேலாக சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள வீடுகள் மற்றும் கடைகளை இடித்து அகற்ற யாழ். மாநகர சபையினர் பெக்கோ இயந்திரத்துடன் வருகை தந்த போதிலும் அப்பகுதி மக்களின் எதிர்ப்பினால் கைவிடப்பட்டது.

ஜனாதிபதி செயலகத்தின் பரிந்துரைக்கு அமைய யாழ்ப்பாணப் பொலிஸாரின் பாதுகாப்புடன் நேற்று யாழ்.குருநகர் பகுதியில் மாநகர சபையின் ஆளுகைக்கு உட்பட்ட வடிகாலுக்கு மேலாக சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட வீடுகள் மற்றும் கடைத் தொகுதிகளை அப்புறப்படுத்த மாநகரசபை ஊழியர்கள் வருகை தந்த போதிலும் அப்பகுதி மக்கள் குறித்த கட்டடங்களை அகற்ற தமக்கு உரிய காலம் வழங்கப்பட வேண்டும் எனவும் மழை காலத்தில் தாம் மாற்று வழிகளை ஏற்படுத்த முடியாது எனவும் தெரிவித்தனர். கால அவகாசம் தரப்பட வேண்டும் என்ற கோரிக்கைக்கு ஏற்ப மாநகர சபையினால் குறித்த கால அவகாசம் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

எனினும் அந்தக் காலப்பகுதிக்குள் அவர்கள் கட்டடங்களை அகற்றத் தவறினால் மாநகர சபையினால் அகற்றப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5-4-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசிபலன்

13.11.2020
ஐப்பசி 28, வெள்ளிக்கிழமை,
திரயோதசி பிற்பகல் 4.31 மணிவரை
சித்திரை முன்னிரவு 10.26 மணிவரை
சுபநேரம் 6.07-7.37 மணிவரை
இராகுகாலம் 10.37-12.07 மணிவரை
சந்திராஷ்டமம் - பூரட்டாதி, உத்திரட்டாதி

வளவன்

**மேஷம்**: சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், நண்பர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவர், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.

**ரிஷபம்**: உள்ளம் மகிழும் வகையில் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், தொழில் சம்பந்தமாக எடுத்த முயற்சிகள் கைகூடும், செய்தொழில் மேன்மையுண்டு, எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர்.

**மிதுனம்**: பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், நன்மைககள் நாடிவரும் நாள், பிரியமான சிலருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள்.

**கடகம்**: பெற்றோர் மீதான பாசம் கூடும், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும், தேவைகள் பூர்த்தியாகும், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**சிம்மம்**: உறவு-பகை பாராமல் ஒற்றுமையாக இருக்கும் நாள், உடன் பிறப்புக்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

**கன்னி**: தொழில் வளர்ச்சி கருதி ஆக்கபூர்வமான முடிவுகள் எடுப்பீர்கள், சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், போசன சுகமுண்டு.

**துலாம்**: உடல் நலனில் அதிக அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், திட்டமிடாத காரியமொன்று நடைபெறும் வாய்ப்புண்டு, தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**விருச்சிகம்**: பிரபலமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், வீட்டுத்தேவைகளைப் பூர்தி செய்யும் எண்ணம் உருவாகும், காரிய அலைச்சல்கள் இடம்பெறலாம், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**தனுசு**: தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம், வாய்ப்புக்கள் தேடி வரலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மகரம்**: விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், செலவுக்கேற்ப வருமானம் வந்து சேரலாம், காரிய அனுகூலமுண்டு, செய்தொழில் மேன்மையுண்டு.

**கும்பம்**: நேற்றைய பணியொன்று இன்றும் தொடரலாம், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், தேவையற்ற மனஸ்தாபங்கள் அகலும், பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள்.

**மீனம்**: வரவும் செலவும் சமமாகும் நாள், காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், தொழில் ரீதியான பயணங்களில் கூடுதல் கவனம் தேவை.

வார்த்தைகள் முக்கியமல்ல அர்த்தங்கள் தான் முக்கியம்

# மீன் சாப்பிடுவதால் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கிறது

## வீண் அச்சங்களை தவிர்ப்போம்

**(கொழும்பு)**

**மீன் சாப்பிடுவதற்கு வீணாக அச்சப்படத் தேவையில்லை. பேலியகொட மீன் சந்தையில்ஏற்பட்ட கொரோனாத் தொற்று மீனில் இருந்து ஏற்பட்டது அல்ல. மீன் வியாபாரியிடமிருந்தே ஏற்பட்டிருக்க வேண்டும் என தொற்று நோய்கள் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் பசன் ஜயசிங்க தெரிவித்தார்.**

மீன் சாப்பிடுவதற்கு மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கும் அச்சம் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

பேலியகொட மொத்த மீன் விற்பனை சந்தையில் கொரோனாத் தொற்றாளர்கள் கண்டு பிடிக்கப்பட்டதன் பின்னர் பொது மக்கள் மீன் சாப்பிடுவதற்கு வீணான பயத்தை ஏற்படுத்திக்கொண்டுள்ளனர்.

மீன் சாப்பிடுவதால் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கின்றது. அதனால் தற்போதைய நிலையில் எமது ஆகாரத்தில் மீனை சேர்த்துக்கொள்வது அத்தியாவசியமாகும்.

அத்துடன் இலங்கை மக்கள் மீன் சமைக்கும் முறையின் பிரகாரம் அதனுள் எந்தவொரு வைரஸூம் இருக்க முடியாது. அதிகூடிய வெப்பத்தில் மீன் சமைப்பதன் மூலம் அதனுள் இருக்கும் பாதகமானவைகள் அழிவடைந்து செல்கின்றன.

மீன் சமைத்த பின்னர் சவர்க்காரமிட்டு கைகள் மற்றும் அதற்காகப் பயன்படுத்திய பாத்திரங்களை கழுவிக்கொள்வது அவசியமாகும்.

மேலும் பேலியகொட மொத்த மீன் சந்தைக்கு கொரோனாத் தொற்று பரவியது மீன்கள் ஊடாக அல்ல. மாறாக மீன் வியாபாரத்தில் ஈடுபட்டு வரும் வியாபாரிகளின் மூலமாகவே பரவியிருக்கும் என நம்புகின்றோம்.

அதனால் மக்கள் வீணாக அச்சப்பட்டு மீன் சாப்பிடுவதை நிறுத்த வேண்டாம். மீன் வகைகளிலே அதிக நோய் எதிர்ப்பு சக்தி இருக்கின்றது. அதனால் எமது நோய்எதிர்ப்பு சக்தியை அதிகரித்துக்கொள்ள மீன் பிரதான உணவாகும் என்றார். (நி-4)

# ஜனாஸா அடக்கம் வர்த்தமானி வெளிவரும் வரை நாம் பொறுமை காப்போம்-இம்ரான்

(கொழும்பு)

ஜனாஸா அடக்கம் செய்வது தொடர்பான வர்த்தமானி வெளிவரும் வரை அனைவரும் பொறுமை காப்போம் என திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார். நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

கொரோனாவால் மரணித்த முஸ்லிம்களின் உடல்களை அடக்கம் செய்வது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் இதுவரை வெளியிடப்படவில்லை.

அது குறித்து இன்னும் உறுதியான முடிவு எடுக்கப்படவில்லை என அரசு அறிவித்து விட்டது.

எனவே அரசின் உத்தியோகபூர்வ அறிவித்தல் அல்லது வர்த்தமானி அறிவித்தல் வெளிவரும் வரை வீணான தகவல்களை சமூக வலைத்தளங்களில் பதிவிடுவதில் இருந்து தவிர்த்துக்கொள்வது சிறந்தது.

சுகாதாரத் துறையின் ஆலோசனைக்கு அமையவே ஜனாஸாவை அடக்கம் செய்யும் அனுமதியை வழங்க முடியும் எனக் கூறும் அரசாங்கம் கொரோனாவைக் கட்டுப்படுத்த நாட்டை முடக்க வேண்டும் என சுகாதாரத்துறை கூறிய போது அதை நடைமுறைப் படுத்தவில்லை.

ஆகவே இங்கு பிரச்சினை சுகாதாரத் துறை அல்ல என்பதை நாம் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும். ஏமாற்று நடவடிக்கைகளை நம்புவதிலிருந்து விடுபட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# தேர்தல்கள் ஆணைக்குழுவின் பதவிக் காலம் நிறைவு

(கொழும்பு)

அரசமைப்பின் 19 ஆவது திருத்தச் சட்டம் ஊடாக 2015 ஆம் ஆண்டு, நவம்பர் 13 ஆம் திகதி அமைக்கப்பட்ட தேர்தல்கள் ஆணைக்குழுவின் பதவிக் காலம் நேற்றுடன் நிறைவுக்கு வந்துள்ளது.

அத்துடன் ஆணைக்குழுவின் தவிசாளர் மகிந்த தேசப்பிரியவின் பதவிக்காலமும் நிறைவுக்கு வந்துள்ளது.

குறித்த தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல், ஜனாதிபதி சட்டத்தரணி நளின் அபேசேகரவும் நியமிக்கப்பட்டிருந்தனர்.

எனினும் அரச்மைப்பின் 20 ஆம் திருத்தத்துக்கு அமைய, புதிய ஆணைக்குழுவில் 5 உறுப்பினர்கள் நியமிக்கப்படவுள்ளதுடன் இதுவரை உறுப்பினர்கள் எவரும் நியமிக்கப்படவில்லை.

20 ஆம் திருத்தத்துக்கு அமைய, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் பெயரிடப்படும் உறுப்பினர்களின் பெயர்களை பாராளுமன்ற பேரவைக்கு சமர்ப்பித்து, பாராளுமன்ற பேரவை தமது ஆய்வை மீண்டும் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்த பின்னரே, தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கு உறுப்பினர்கள் நியமிக்கப்படவுள்ளனர். (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 50 பேரின் தலையை துண்டித்த ஐ.எஸ். பயங்கரவாதிகள்



(மாபுடோ)

மொசாம்பிக் நாட்டில் கால்பந்து மைதானத்தில் வைத்து 50 பேரை ஐ.எஸ்.பயங்கரவாதிகள் தலைதுண்டித்து கொலை செய்துள்ளனர்.

கிழக்கு ஆபிரிக்க நாடான மொசாம்பிக்கில்ஐ.எஸ் பயங்கரவாத அமைப்பு, அதன் ஆதரவு பெற்ற அல் ஷபாப் பயங்கரவாத இயக்கம், அல்கொய்தா உட்பட பல்வேறு பயங்கரவாதகுழுக்கள்கடும் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன.

நாட்டின் பல்வேறு பகுதிகளை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ள ஐ.எஸ், அல் ஷபாப் பயங்கரவாதிகள், பொதுமக்கள், பொலிஸார் மற்றும் இராணுவத்தினரை குறிவைத்து தாக்குதல்களை அரங்கேற்றி வருகின்றனர்

இந்நிலையில், அந்நாட்டின் கபா டெல்ஹடா மாகாணம் மகோமியா மாவட்டம் மவ்டிகிராமத்திற்குள் கடந்த செவ்வாய்க்கிழமை நுழைந்த ஐ.எஸ். பயங்கரவாதிகள் அங்கிருந்த வீடுகளுக்கு தீவைத்து கொளுத்தினர். மேலும், அந்த கிராமத்தில் இருந்த 50-க்கும் மேற்பட்டோரை இளைஞர்கள் விளையாடுவதற்காக அமைக்கப்பட்டிருந்த கால்பந்து மைதானத்திற்கு இழுத்து சென்றனர்.

அந்த மைதானத்தில் வைத்து தாங்கள் இழுத்துவந்த 50-க்கும் மேற்பட்டோரை தலை துண்டித்து கொடூரமான முறையில் கொலை செய்தனர்.

கொல்லப்பட்டவர்களின் உடல்களை பயங்கரவாதிகள் அங்கும் இங்கும் என வீசி சென்றுள்ளனர். மேலும், சில பெண்கள், குழந்தைகளையும் பயங்கரவாதிகள் கடத்திச் சென்றுள்ளனர்.

இந்த சம்பவம் குறித்து விசாரணை நடைபெற்று வருவதாக மொசாம்பிக் பாதுகாப்பு படையினர் தெரிவித்துள்ளனர். (நி)

# ஹொங்கொங்கில் ஜனநாயக ஆதரவு சட்டசபை உறுப்பினர்கள் கூண்டோடு ராஜினாமா



(ஹொங்கொங்)

ஹொங்கொங் சட்டசபையில் இருந்து ஜனநாயக ஆதரவு உறுப்பினர்கள் அனைவரும் கூண்டோடு ராஜினாமா செய்துள்ளனர்.

சீனாவின் தேசிய பாதுகாப்பு சட்டம் ஹொங்கொங்கில் அமுல்படுத்தப்பட்டதில் இருந்தே ஜனநாயகத்திற்கு ஆதரவான அரசியல் கட்சியினர் பெரும் பாதிப்பிற்கு உள்ளாகி வருகின்றனர்.

மக்கள் போராட்டங்கள் ஒடுக்கப்பட்டுள்ளது. மேலும், ஹொங்கொங்கின் சட்டசபை உள்விவகாரங்களிலும் சீனா நேரடியாக தலையிடும் நிலை ஏற்பட்டுள்ளது.

சட்டம் நிறைவேற்றப்பட்ட உடன் ஹொங்கொங் சுதந்திரத்திற்கு ஆதரவாக சட்டசபை உறுப்பினர்கள் 4 பேரை ஹொங்கொங் அரசாங்கம் உறுப்பினர் பதவியில் இருந்து நீக்கியது. இந்த சம்பவம் ஹொங்கொங் ஜனநாயக ஆதரவு உறுப்பினர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இந்நிலையில், 4 சட்டசபை உறுப்பினர்களை பதவி நீக்கம் செய்ததை கண்டித்து ஜனநாயக ஆதரவு சட்டசபை உறுப்பினர்களான எதிர்க்கட்சியினர் 15 பேரும் தங்கள் பதவியை நேற்று இராஜினாமா செய்தனர். இந்த இராஜினாமா ஹொங் கொங்கில் மக்கள் போராட்டத்திற்கு வழிவகுக்கலாம் என தகவல்கள் வெளியாகியுள்ளது. (நி)

# குடியேற்றவாசிகளுடன் சென்ற படகு இரண்டாக பிளவடைந்தது

## குழந்தை உட்பட அறுவர் பலி



(டமாஸ்கஸ்)

சட்டவிரோத குடியேற்ற வாசிகளை ஏற்றிச் சென்ற படகொன்று மத்திய தரைக்கடலான லிபிய கடற்பரப்பில் விபத்துக்குள்ளானதில் ஐந்து மாதக் குழந்தை உட்பட ஆறு பேர் உயிரிழந்துள்ளனர்.

லிபியாவின் பண்டைய நகரமான சப்ரதாவிலிருந்து 30 மைல் (48 கிலோமீற்றர்) தொலைவிலேயே இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளதாக ஸ்பெயினின் மனிதாபிமான குழு ஒன்று நேற்று முன்தினம் புதன்கிழமை தெரிவித்துள்ளது.

குறித்த படகானது இரண்டாக பிளவடைந்தே விபத்துக்குள்ளாகியுள்ளதுடன், 110 குடியேற்றவாசிகளை மீட்புக் குழுவினர் மீட்டுள்ளனர்.

இந்த விபத்தானது லிபியாவின் வடக்கே உள்ள கடற் பகுதியில் இந்த வாரம் பதிவு செய்யப்பட்ட இரண்டாவது விபத்தாகும். அண்மையில் இடம்பெற்ற படகு விபத்தொன்றில் ஒரு குழந்தை உட்பட 13 புலம்பெயர்ந்தோர் உயிரிழந்ததாக ஐ.நா. தெரிவித்தது.

இப் பகுதியானது ஆபிரிக்கா மற்றும் மத்திய கிழக்கில் இருந்து குடியேறுபவர்களுக்கான முக்கிய போக்குவரத்து இடமாக அமைந்துள்ளது.

இவ் ஆண்டு இதுவரை மத்திய தரைக் கடலில் ஐரோப்பாவை அடைய முயன்ற 575 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாக இடம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.(நி)

# குழந்தைகள் கொலை; செவிலியர் கைது






(லண்டன்)

செஸ்டர் மருத்துவமனையின் கவுண்டஸில் எட்டு குழந்தைகளை கொலை செய்ததோடு, மேலும் 10 பேரை கொலை செய்ய முயன்றதாக ஒரு செவிலியர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

30 வயதான லூசி லெட்பி, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் நவநேட்டல் பிரிவில் மரணங்கள் தொடர்பான விசாரணையின் ஒரு பகுதியாக கைது செய்யப்பட்டார்.

2015ஆம் ஆண்டு ஜூன் முதல் 2016ஆம் ஆண்டு ஜூன் வரை மருத்துவமனையில் சுமார் 15 குழந்தைகளின் மர்ம மரணம் தொடர்பாக கடந்த 2017ஆம் ஆண்டு மே மாதம் அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதனையடுத்து சந்தேகத்தின் பேரில் கடந்த 2018 ஆம் ஆண்டு முதன் முறையாக செவிலியர் லூசி கைது செய்யப்பட்டார். தொடர்ந்து பிணையிலும் அவர் வெளிவந்துள்ளார்.

ஆனால் 2019ஆம் ஆண்டு ஜூன் மாதம், 8 குழந்தைகள் கொலை மற்றும் 10 குழந்தைகளை கொல்ல முயன்றது தொடர்பாக மீண்டும் கைது செய்யப்பட்டார்.

தற்போது பொலிஸ் காவலில் உள்ள 30 வயதான ஹியர்ஃபோர்டில் உள்ள அரான் அவென்யூவைச் சேர்ந்த எம்.எஸ். லெட்பி வோரிங்டன் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ளார். (நி)

# மும்பை தாக்குதலுடன் தொடர்புடைய பயங்கரவாதிகளின் பெயர் வெளியீடு





(மும்பை)

மும்பை தாக்குதலுடன் தொடர்புடைய 11 பயங்கரவாதிகள் பாகிஸ்தானில் இருப்பதாக அந்நாடு ஒப்புக்கொண்டுள்ளது. மஹாராஷ்டிரா தலைநகர் மும்பையில் 2008ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 150 இற்கும் அதிகமானோர் உயிரிழந்ததுடன் பலர் காயமடைந்தனர்.

இந்த தாக்குதலில் தொடர்புடைய பயங்கரவாதிகள் பாகிஸ்தானில் சுதந்திரமாக சுற்றி திரிவதாக இந்தியா தொடர்ந்து கூறி வருகிறது. ஆனால் இதை பாகிஸ்தான் மறுத்து வந்தது.

இந்த தாக்குதலுக்கு மூளையாக செயற்பட்ட ஜமாத் உத் தவா என்ற பயங்கரவாத அமைப்பின் தலைவர் ஹபீஸ் சயீத்தை மட்டும் சர்வதேச நெருக்கடிக்கு பயந்து பாகிஸ்தான் அரசு கைது செய்தது. இவரை சர்வதேச பயங்கரவாதிகள் பட்டியலில் ஐ.நா. சபை சேர்த்துள்ளது.

இந்நிலையில் பாகிஸ்தானில் தேடப்படும் பயங்கரவாதிகள் பட்டியலை அந்நாட்டின் விசாரணை அமைப்பான எப்.ஐ.ஏ.இ வெளியிட்டுள்ளது.

இதில் ஆயிரத்து 210 பயங்கரவாதிகளின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன. இதில் 11 பேர் மும்பை தாக்குதலுடன் தொடர்புடையவர்களாவர்.

இவர்கள் மும்பை தாக்குதலில் ஈடுபட்ட பயங்கரவாதிகளுக்கு நிதி, பொருள், சாதனங்கள் கொடுத்து உதவி செய்துள்ளதுடன் தாக்குதல் நடத்துவதற்கான ஏற்பாடுகளையும் செய்துள்ளதாக அந்தப் பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றாடல் மற்றும் மகாவலி அபிவிருத்தி அமைச்சு
இலங்கை மகாவலி அதிகார சபை

# பதவி வெற்றிடங்கள்

இலங்கை மகாவலி அதிகார சபையில் நிலவும் பின்வரும் வெற்றிடங்களுக்காக தகைமை வாய்ந்த இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| பதவி | : | பயிர்ச்செய்கை விஞ்ஞானி (IIஆந் தரம்) |
| சேவை வகுதி | : | முகாமைத்துவம் (MM 1-1 சேவை வகுதி) |
| சம்பள அளவு | : | ரூபா 53,175 - 10x1,375 - 15x1,910 - 95,575/- |
| தகைமைகள் (பின்வரும் தகைமைகளில் 1) | : | 1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விவசாயவியல் விசேடமாணி பட்டமொன்றைப் பெற்றிருத்தல் மற்றும் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் பதவிக்கு இயைபான விடயத்துறையில் ஆகக்குறைந்தது ஒரு (01) வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும். |
| வயது | : | 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். |
| சேர்த்துக் கொள்ளப்படும் முறை | : | எழுத்து மூலப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் மூலம் |

இதன்பொருட்டு தம்மால் தயார் செய்து கொள்ளப்பட்ட விண்ணப்பப் படிவத்தை 2020-11-25ஆம் திகதி அல்லது அதற்கு முன் பணிப்பாளர் நாயகம், இலங்கை மகாவலி அதிகார சபை, இல. 500, டீ. பீ. ஜயா மாவத்தை, கொழும்பு-10. எனும் முகவரிக்குக் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறித்த பதவியின் பெயரை தெளிவாகக் குறிப்பிடுவதுடன் குறித்த திகதிக்குப் பின் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பது தெரிவிக்கப்படுகிறது. விண்ணப்பத்துடன் கல்வி /தொழில்சார் சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்து அனுப்புதல் வேண்டும். அவ்வாறு சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்து அனுப்பாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

தற்பொழுது அரச சேவையிலுள்ளவர்கள் தமது விண்ணப்பங்களை தமது திணைக்களத் தலைவரினூடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

இது தொடர்பில் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளும் உரிமையை இலங்கை மகாவலி அதிகார. சபையின் பணிப்பாளர் நாயகம் தன்னகத்தே கொண்டுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

கவனிக்கவும்: விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தில் அந்தந்த பதவிக்குரித்தான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை மகாவலி அதிகார சபை.**


# அதிபர் பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

வரமராட்சி வலயத்தில் 2020.11.11 ஆம் திகதியன்று வெற்றிடம் ஏற்பட்டுள்ள நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை (வகை-III) எதிாவரும் 2021.02.21 ஆம் திகதியன்று வெற்றிடம் ஏற்படவுள்ள கட்டைவேலி யாக்கரு விநாயகர் வித்தியாலயம் (வகை-II) மற்றும் எதிர்வரும் 2021.02.26 ஆம் திகதியன்று வெற்றிடம் ஏற்படவுள்ள கரணவாய் மணியகாரன் தோட்டம் அ.த.க.பாடசலை (வகை-III) ஆகியவற்றுக்கான அதிபர் பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரர்கள் வடமராட்சி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் நிரந்தரமாக இலங்கை அதிபர் சேவையில் சேவையாற்றுபவர்களாக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்கள் மற்றும் மேலதிக விபரங்களை வலயக்கல்வி அலுவலகத்தின் தாபனப்பிரிவில் பெற்றுக் கொள்ள முடியும் என வடமராட்சி வலயக் கல்வி [illegible] தீபன் அறிவித்துள்ளார். [illegible]

# இணைய வழிக் கல்வியால் பயனடைவோர் சிலரே

## மாற்றுவழி அவசியம் என்கிறார் சுஜித்

(கொழும்பு)

**சாதாரணதர மாணவர்களைப் பரீட்சைக்கு தயாராக்குவதற்காக அரச தொலைக் காட்சி ஊடகங்களை பயன்படுத்தி அவர்களுக்கான பாடங்களை கற்பிப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சுஜித் சஞ்சய பெரேரா வேண்டுகோள் விடுத்தார்.**



வைரஸ் பரவல் காரணமாக பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. எனினும் எதிர்வரும் ஜனவரி மாதம் சாதாரணதர பரீட்சையை நடத்துவதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. இந்நிலையில் மாணவர்களுக்கு தற்போது இணைய வழி கற்பித்தல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஆனால் அனைத்து மாணவர்களுக்கும் இணையத்தில் கல்வி கற்றுக் கொள்ளும் அளவுக்கு வசதிகள் இல்லை. எமது ஆட்சிக்காலத்தில் நாங்கள் 'ரப்' கருவிகளைக் கொடுக்க நடவடிக்கை எடுத்தபோது இப்போது ஆளும் தரப்பில் இருப்பவர்கள் பெரிதும் விமர்சித்தார்கள். எனினும் தற்போது பரீட்சையில் தோற்றும் மாணவர்களின் நிலைமையை கருத்திற் கொண்டு அரச தொலைக் காட்சி ஊடகங்களில் அவர்களுக்கான பாடங்களை கற்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

# பிரதேச மட்டங்களில் கொரோனா வைத்தியசாலைகள்

## சுகாதார அமைச்சு ஆராய்வு



(கொழும்பு)

எதிர்வரும் காலங்களில் பிரதேச மற்றும் மாவட்ட மட்டங்களில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கான வைத்தியசாலைகளை மேலும் ஒதுக்கீடு செய்வது குறித்து சுகாதார அமைச்சு ஆராய்ந்து வருகின்றது.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு அடுத்தகட்டமாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்வதற்காக சுகாதார அமைச்சினால் நியமிக்கப்பட்டிருக்கும் விசேட ஆய்வுக்குழு நேற்று முன்தினம் புதன்கிழமை சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தலைமையில் கூடியதுடன் இதன்போது பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டது.

இதன்போது கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியிருப்பதாக உறுதி செய்யப்பட்டுள்ள நோயாளர்களை அவர்களுடைய நோய் நிலைமையின் தீவிரத்தன்மையின் அடிப்படையில் உரிய வைத்தியசாலைகளுக்கு அனுப்பி வைப்பதற்காக திட்டத்தைத் தயாரிப்பது குறித்து கலந்துரையாடப்பட்டது.

மேலும் இனிவரும் காலங்களில் பிரதேச மற்றும் மாவட்ட மட்டங்களில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கான வைத்தியசாலைகளை ஒதுக்கீடு செய்தல், கொரோனா வைரஸ் தொற்றாளர்களுக்கு சிகிச்சை வழங்கும் அதேவேளை ஏனைய நோய்கள் காரணமாக வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுபவர்களுக்கு அவசியமான சிகிச்சைகளை மேலும் வலுப்படுத்தல், நோயாளர்களும் சுகாதாரப் பிரிவு ஊழியர்களும் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை இனங்கண்டு அவர்களை உளவியல் ரீதியில் மேலும் ஸ்திரப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் ஆகிய விடயங்கள் தொடர்பிலும் இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

மேலும் இணைய வழியில் கொரோனா வைரஸ் பரவல் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயற்றிட்டங்களை முன்னெடுத்தல் குறித்தும் ஊரடங்கு தளர்த்தப்பட்டுள்ள நிலையில் எதிர்காலத்தில் வைரஸ் பரவல் மேலும் அதிகரிக்கும் பட்சத்தில் அதனை எதிர்கொள்வதற்கான தயார்படுத்தல்களைச் செய்வது குறித்தும் இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்க A பிரிவு வழங்கும்

# அதிகரித்து வரும் காலநிலை மாற்றமும் அதனை கட்டுப்படுத்துவதில் இளந்தலைமுறையினரின் பங்களிப்பும்..!

காலநிலை மாற்றம் காரணமாக புவியின் சராசரி வெப்பமானது வருகிற 2030ஆம் ஆண்டில் **pre- industrial period** என்று சொல்லப்படுகின்ற தொழிற் புரட்சி காலத்திற்கு முன்பிருந்ததை விட **1.5$^0$C** உயரும் என்றும், அவ்வாறு உயர்ந்தால் அது பல்வேறு வகையான விளைவுகளை ஏற்படுத்தும் என்பது அனைவரும் அறிய வேண்டிய உண்மையே.

20ஆம் நூற்றாண்டின் மத்தியிலிருந்து தற்போது வரை நடந்து கொண்டிருக்கும் காலநிலை மாற்றங்களுக்கு புதைபடிவ எரிமங்களின் எரிப்பு, காடழிப்பு போன்ற மனித செயற்பாடுகளே 95% காரணம் என்கின்றன ஆய்வுகள்.

இந்நடவடிக்கைகள் மூலம் $CO_2$, $CH_4$ அடி வளிமண்டல ஓசோன், CFC, $NO_2$ ஆகியவற் றின் செறிவு வளிமண்டலத்தில் அதிகரித்துள்ளது.

புதைபடிவ எரிமங்களின் எரிப்பு, நிலப்பயன்பாடு மாற்றம் காரணமாகவும் $CO_2$ செறிவு அதிகரித்துச்செல்கின்றது. $CO_2$ செறிவு கூடிச் செல்லும் வேகம் பொருளாதார, சமூக, இயற்கை துறைகளில் ஏற்படும் வளர்ச்சிகளிலேயே தங்கியுள்ளது.

அதிகரித்துவரும் காலநிலை மாற்றம் காரணமாக கடல்மட்டத்தை உயரச்செய்து வீழ்படிவு கோலத்தை மாற்றிவிடும். அத்துடன் பாலைவனப் பகுதிகள் விரிவடைதல், பனிப்பாறைகள் உருகுதல், உயிரினத்தொகுதி அழிவடைதல், சமநிலை பாதிப்படைதல், இயற்கை அனர்த்தங்கள் ஏற்படும் எனவும் எதிர்வு கூறப்படுகின்றது.

இந்தவகையில் உலகளாவிய ரீதியில் எதிர்நோக்கிவரும் காலநிலை மாற்றத்திற்கு தீர்வுகளை பெற்றுக் கொடுப்பதற்காக இளையோர் அணி ஒன்றுதிரண்டு ஒழுங்கமைத்துக் கொண்டிருக்கும் பாரிய நிகழ்வே கிளைமத்தோன் 2020 ஆகும்.

காலநிலை மாற்றம் என்கின்ற சவாலை உலகம் பூராகவும் எதிர் நோக்கிக் கொண்டு இருக்கின்றார்கள் என்பது யாவரும் அறிந்த உண்மையே.

காலநிலை மாற்றத்திற்கான தீர்வுகளை வலியுறுத்தி உலகம் பூராகவும் 150 இற்கும் மேற்பட்ட நகரங்களில் வரும் நவம்பர் 13.14.15 ஆம் திகதிகளில் இளையோர் அணிதிரள உள்ளார்கள். கிளைமத்தோன் நிகழ்வானது இவ்வருடம் இரண்டாவது தடவையாக யாழ்ப்பாணத்தில் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

உலகப் பொதுமுடக்கம் காரணமாக இவ்வருடம் கிளைமத்தோன் நிகழ்வானது முழுமையாக இணைய



வழியில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

இவ்வருடம் இயற்கைவழி இயக்கம் **OMNE (Organic Movement of North and East)** இவ் விழாவிற்கான பிரதான ஒழுங்கமைப்பாளராக திகழ்கின்றது.

யாழ்ப்பாண மாநகர சபை, யாழ்ப்பாண வர்த்தக தொழிற்றுறை மன்றம் **(CCIY)**, வடக்கு மாகாண தகவல் தொழில்நுட்பச் சம்மேளனம் **(NCIT)**, யாழ்ப்பாணப் பயில்களம் **(JLF)**, சுவடி நிறுவகம் ஆகியோரும் இளையவரின் காலநிலை மாற்றத்திற்கான பயணத்திற்கு கைகோர்க்கின்றன.

அதுமட்டுமன்றி புலம்பெயர் நாடுகளில் இருந்து Climathon ... ஆகிய அமைப்புக்களும் முக்கிய பங்காளர்களாக இணைந்து மேலும் வலுச்சேர்க்கின்றன. நூலக நிறுவனம் மற்றும் ஊற்று சிந்தனை நடுவம் ஆகிய நிறுவனங்கள் அறிவு சார் பங்காளர்களாக இணைந்து தொடர்ச்சியான செயற்பாடுகளுக்கு வழியமைக்கின்றன.

அதுமட்டுமன்றி இந்நிகழ்வில் அளப்பெரிய பங்கினை சுற்றுச்சூழல் சார்ந்து பல்வேறு பணிகளை முன்னெடுத்து வரும் இளையோர் அமைப்புக்கள் திகழ்கின்றன. அதன் வரிசையில், சிறகுகள், வடமராட்சி பசுமை நிழல், ஔடதம், **Plastic Zero Forum**, விதை அனைத்தும் விருட்சமே, பசுமை நிழல்கள், சுயாதீன இளையோர் அமைப்பு - வவுனியா, சுழியம் அமைப்பு - மட்டக்களப்பு, சுவடுகள் அமையம், **SS Creation Design** பங்காளர்களாக இணைந்து இந் நிகழ்வின் வெற்றிக்கு பெரும் பங்கு வகிக்கின்றன.

இவ்வருடம் 3 தொனிப் பொருட்களில் கிளைமத்தோன் நிகழ்வானது ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

1. நிலைபேறான உணவு மற்றும் நீர்த்தொகுதி
2. நிலைபேறான கழிவு முகாமைத்துவம்
3. நிலைபேறான போக்குவரத்து மற்றும் மீள்பயன்பாட்டு சக்திகள்

காலநிலை தொடர்பாக பாடசாலை மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிறகுகள் அமையம் மூலம் கட்டுரை, சித்திரப் போட்டிகளும் மனிதம் அமைப்பின் மூலம் புகைப்படப் போட்டிகளும் ஒழுங்கமைக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றன.

காலநிலை மாற்றம் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வுகளை சமர்ப்பிக்கும் வகையில் பல்கலைக்கழக மாணவர்களிடையே மற்றும் சமூக ஆர்வலர்களிடையே போட்டிகளும் ஒழுங்கமைக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றன.

இத்தொனிப்பொருட்களிற்கு வலுவூட்டும் வகையில் போட்டியில் பங்கு பெறுவோருக்கு தொடர்ச்சியாக துறைசார் வல்லுநர்களால் **Climathon Talk** உரையாடல்கள் வாரந்தோறும் இணைய வழியில் இடம்பெற்று வருகின்றன.

கிளைமத்தோன் நிகழ்வின் இறுதி நிகழ்வில், துறைசார் நிபுணர்கள், இளம் தொழில் முயற்சியாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், புத்தாக்குநர்கள் எனப் பலரும் காலநிலை மாற்றத்திற்கான தீர்வுகளை முன்வைப்புடன் காலநிலை மாற்றம் சார்ந்த கருத்தாடல்கள், ஆலோசனைகளும் நடைபெறவுள்ளன.

இளையவர்களின் இவ்வாறான ஆக்கபூர்வமான ஆரம்பத்திற்கு அனைவரும் இணைய வழியில் இணைந்து உங்கள் பங்களிப்பை வழங்குவதன் மூலம் இளையவர்களின் முயற்சிக்கு வலுச்சேர்க்க இணைந்து கொள்ளுங்கள்.

**Zoom Meeting ID** 81754847355. மேலும் விபரங்களை அறிந்து கொள்ள 076 465 8482 என்ற அலைபேசியூடாக தொடர்பு கொள்ளுங்கள்.


**நிவேதா சிவராஜா**
**ஒழுங்கமைப்புக் குழு,**
**கிளைமத்தோன்,**
**யாழ்ப்பாணம் 2020.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொற்றா நோயாளர்களுக்கு கொரோனா ஏற்பட்டால் ஆயுட்காலம் 10 வருடங்கள் குறையும்

(கொழும்பு)

**தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டால் அவர்களின் ஆயுட் காலத்தில் 10 வருடங்கள் குறையக் கூடும் என சுகாதார அமைச்சின் ஊடகப் பேச்சாளர் வைத்தியர் ஜயருவன் பண்டார தெரிவித்துள்ளார்.**



இந்நிலையில் நீரிழிவு நோய், உயர் இரத்த அழுத்தம், இதயம் சம்பந்தமான நோய்களினால் பாதிக்கப்பட்டவர்கள் கொரோனாத் தொற்றுக்கு உள்ளானால் அவர்களின் ஆயுட்காலம் 10 வருடங்கள் குறையக் கூடும் என அவர் எச்சரித்துள்ளார்.

அதற்கமைய 60 வயது கடந்தவர்கள் கொரோனாத்தொற்றினால் உயிரிழப்பதற்கான அதிக வாய்ப்புகள் உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, கொரோனாத் தொற்றுக்கு உள்ளானவர்கள் வீடுகளில் உயிரிழப்பதற்குக் கவனக்குறைவே முக்கிய காரணம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-4)

# இதுவரை 14 இலட்சத்திற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு 5000 ரூபாய் வழங்கப்பட்டது

(கொழும்பு)

நாட்டில் இதுவரையான காலப்பகுதிக்குள் 14 இலட்சத்து 9 ஆயிரத்து 578 குடும்பங்களுக்கு 5000 ரூபாய் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்ட காலப்பகுதிக்குள் தமது வாழ்வாதாரத்தை இழந்த மக்களுக்கு நிவாரணத்தை வழங்கும் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தின் கீழ் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், இதுவரையில் கொடுப்பனவுகள் வழங்கப்படாத குடும்பங்களுக்கு 5000 ரூபாய் பணத்தை வழங்கும் நடவடிக்கை தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அரசாங்கத் தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

ஒக்டோபர் மாதத்திலும் நவம்பர் மாதம் 10 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியிலும் தமது வீடுகளில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப் பட்ட குடும்பங்களுக்கான 10 ஆயிரம் ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் அடங்கிய நிவாரணப் பொதிகளை வழங்கும் வேலைத்திட்டமும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# பேலியகொட மீன் சந்தை மீண்டும் திறக்கப்படுகிறதா?

(கொழும்பு)

ஊழியர்களின் இறுதி பி.சி.ஆர். அறிக்கையின் அடிப்படையிலே பேலியகொட மீன் சந்தையை மீண்டும் திறப்பதற்கான திகதி நிர்ணயிக்கப்படும் என கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.



பேலியகொட மீன் சந்தையில் பணிபுரியும் ஊழியர்களில் பலருக்கு கொரோனாத் தொற்று அடையாளம் காணப்பட்டதையடுத்து, குறித்த மீன் சந்தையை தற்காலிகமாக மூட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர், "பேலியகொட மொத்த மீன் சந்தைத் தொகுதியில் கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டதைத் தொடர்ந்து, கடந்த மாதம் இறுதியில் மீன் சந்தையை தற்காலிகமாக மூடப்பட்டது.

மக்களின் சுகாதார பாதுகாப்பு தொடர்பாக கருத்திற்கொண்டு, அங்கு, ஊழியர்களிடம் பெற்றுக் கொள்ளப்படும் இறுதி பி.சி.ஆர். அறிக்கையின் அடிப்படையிலே, மீன் சந்தையை மீண்டும் திறப்பதற்கான திகதி நிர்ணயிக்கப்படும்.

அத்துடன் மீன் சந்தை திறக்கப்படும் போது ஆரம்பமாக மொத்த வியாபாரிகளுக்கு மாத்திரம் திறக்கப்படும்.

பின்னர் சுகாதார வழிகாட்டல் மற்றும் சட்டத்தின் பிரகாரம் சில்லறை வியாபாரத்துக்கு முறையான வேலைத்திட்டத்தின் கீழ் ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## செவிச் செல்வம்

ஐயா...உங்கள் பேச்சை தொடர்ந்து தினம் கேட்டுக் கொண்டிருக்கின்றேன் என்றார் ஒருத்தர். தொடர்ந்து கேட்கின்றீர்களே உங்களுக்குக் காது வலிக்கவில்லையா? என்று கேட்டேன். பேசுகின்ற உங்களுக்கே வாய் வலிக்கவில்லை என்கின்ற பொழுது கேட்கின்ற எனக்கு காது எப்படி வலிக்கும்? என்றார். எங்கள் உடம்பிலே உள்ள ஓர் அதிசயம் என்ன தெரியுமா? நிறைய நேரம் நாம் நடக்கின்றோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். கால் வலிக்கும். நிறைய நேரம் வேலை செய்தால் கைவலிக்கும், உடம்பு வலிக்கும்.. நிறைய நேரம் பார்த்துக் கொண்டே இருந்தால் கண் வலிக்கும், நிறைய நேரம் பேசிக் கொண்டே இருந்தால் வாய்கூட வலிக்கும்.

ஆனால் நிறைய நேரம் கேட்டுக் கொண்டே இருப்பதனால் காது வலிப்பதில்லை. அதனால் கேட்பதற்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள் எங்கள் பெரியவர்கள். திருவள்ளுவர் தேவையில்லாமல் வார்த்தைகளை உபயோகப்படுத்த மாட்டார்.

ஒரு திருக்குறள் என்று எடுத்துக் கொண்டாலே அதிலே மொத்தம் ஏழு வார்த்தைகள். அவ்வளவு தான். அப்படி ஏழு வார்த்தைகள் மட்டுமே உள்ள ஒரு திருக்குறளில் வள்ளுவர் ஒரே சொல்லை 5 தடவை திரும்பத் திரும்ப பயன்படுத்தியிருக்கிறார். அப்படி என்றால் அதை அந்த அளவுக்கு வலியுறுத்திச் சொல்கின்றார் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அது என்ன குறள்.

செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை

செவிச்செல்வம் என்பது அவ்வளவு முக்கியமானது. கற்றலின் கேட்டல் நன்று. அதிகம் கேட்க வேண்டும் என்பதற்காகத் தான் எவ்வளவு கேட்டாலும் காது வலிக்கிறதில்லை. குறைச்சலாக பேச வேண்டும். அதிகமாக கேட்க வேண்டும். இன்னொரு விடயம் கவனியுங்கள்.

எங்கள் உடம்பிலே கண்ணிற்கு மூடி இருக்கு. எதையாவது நாம் பார்க்க விரும்பவில்லை என்றால் உடனே கண்ணை மூடிக் கொள்ளலாம். எங்கள் வாய்க்கு மூடி இருக்கின்றது. எதையாவது நாம் பேச விருப்பமில்லை என்றால் வாயை மூடிக் கொள்ளலாம். மூக்கைக் கூட மூடிக் கொள்ளும் வசதி இருக்கின்றது. எதையாவது முகர விருப்பமில்லையா...மூச்சை அடக்கிக் கொள்ளலாம். ஆனால் பாருங்கள் காதுக்கு மூடி கிடையாது. அதைக் கையாலே தான் மூட முடியும்.

யார் என்ன சொன்னாலும் அது நல்லதோ கெட்டதோ காதிலே விழுந்துவிட்டுத் தான் இருக்கும். அறிவு தான் நல்ல விடயங்களை எடுத்துக் கொண்டு கெட்ட விடயங்களை விட்டுவிட வேண்டும். நல்ல கருத்துக்கள் எங்கள் காதிலே நிறைய விழுந்து கொண்டே இருக்க வேண்டும். அதைக் கேட்டு நாம் நல்லபடியாக வாழ வேண்டும் என்பது தான் படைப்பின் விருப்பம்.

ஆன்மிகவாதிகள் கூட ஒன்று சொல்லுவார்கள். அதாவது ஆன்மிகப் பாதையில் நீங்கள் முன்னேற வேண்டும் என்றால் முதலில் சிரவணம் செய்ய வேண்டும் பாருங்கள். அதாவது பெரியவர்கள் சொல்லுகின்ற நல்ல கருத்துக்களைக் கேட்க வேண்டும் என்று அதற்குப் பொருள்.அதனால் யார் நல்ல கருத்துக்களைச் சொன்னாலும் அதை காது கொடுத்துக் கேளுங்கள். இவ்வளவு கருத்துக்களையும் ஒரு நேயரிடம் சொன்னேன்.

அவரும் சரி சரி என்று தலையாட்டிக் கொண்டே இருந்தார் பின்பு சொன்னார்.

நீங்கள் சொல்வது சரி தான் சேர். காதுக்கு மூடி இல்லை என்கின்றது மிகவும் சரி. அதனால் தான் உங்கள் இன்று ஓர் தகவலைக் கூட நாங்கள் விரும்புகின்றோமோ இல்லையோ தினம் காதிலே விழுந்து கொண்டே இருக்கின்றது என்றார்.

எனக்கு மிகவும் பெருமையாக இருந்தது என்றேன் சட்டைக் கொலரைத் தூக்கி விட்டுக் கொண்டு.

ஆனாலும் என்னை மாதிரி சில பேர் நீங்கள் தகவல் சொல்கின்ற சமயத்திலே காதிலே மூடியில்லையே என்று கவலைப்படுகிறேன் என்றார்.

ஏன் என்று கேட்டேன்.

காதை மூடுவதற்குத் தானே வசதியில்லை...ரேடியோவை மூடுவதற்கு வசதி இருக்கல்லவா...அதனால் டக் என்று அதை மூடிவிடுவோம் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக கவனத்தை ஈர்த்துள்ள அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல்

17

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



உதாரணமாக 2020 ஆம் ஆண்டுத் தேர்தலுக்கு ஜனநாயக்கட்சி சார்பில் ஜனாதிபதி வேட்பாளராக நியமனம் பெற 15 பேர்களுக்கு மேல் ஆரம்பத்தில் போட்டியிட்டார்கள். பின்னர் ஒவ்வொருவராக வாபஸ் பெற்று கடைசியில் ஜனநாயக்கட்சி சார்பில் ஜோபிடன் ஜனாதிபதி வேட்பாளராக தேர்ந்தெடுக்கப்பட்டார். இவ்வாறே குடியரசுக்கட்சி சார்பில் ஜனாதிபதி வேட்பாளராக நியமனம் பெற 4 பேர்களுக்கு மேல் ஆரம்பத்தில் போட்டியிட்டார்கள். பின்னர் ஒவ்வொருவராக வாபஸ் பெற்று கடைசியில் குடியரசுக்கட்சி சார்பில் டொனால்ட் ட்ரம்ப் ஜனாதிபதி வேட்பாளராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.


## முதன் நிலை வாக்கெடுப்பும் கட்சிக் குழுக்கூட்டங்களும்


பொதுவாக, முதன் நிலை வாக்கெடுப்பில் அதிக வாக்காளர்கள் பங்குபற்ற முடியும். அவை மாநிலம் முழுவதும் நடத்தப்படுகின்றன, அதே நேரத்தில் கட்சிக் குழுக்கூட்டங்கள் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஒரு இடத்தில் மட்டும் நடக்கும். மேலும் அவை கட்சி உறுப்பினர்களுக்கு மட்டுமே திறந்திருக்கும். வேட்பாளர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான மிகவும் பிரபலமான வழியாக கட்சிக் குழுக்கூட்டங்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் அவை இப்போது மிகவும் குறைவாகவே உள்ளன.

கட்சிக் குழுக்கூட்டம் **(Caucus)** முறையில் பல சிக்கல்கள் இருப்பதால் பல மாநிலங்கள் முதல் நிலை வாக்கெடுப்பு **(Primaries)** இற்குத் தாவி விட்டன. தற்போது மினசோட்டா உட்பட பத்து மாநிலங்களில் மட்டுமே கட்சிக் குழுக்கூட்டம் முறை பின்பற்றப்படுகிறது. ஏனைய மாநிலங்கள் (35) முற்றிலும் முதல் நிலை வாக்கெடுப்பு, அல்லது கட்சிக் குழுக்கூட்டம். முதல் நிலை வாக்கெடுப்பு இரண்டு முறையையும் பயன்படுத்தியோ தங்கள் கட்சி வேட்பாளர்களையும் பிரதிநிதிகளையும் முடிவு செய்கின்றன.

ஒரு கட்சி தனது ஜனாதிபதி வேட்பாளரைத் தெரிவு செய்ய மாநில மட்டத்தில் நடத்தும்

| முதல்நிலை வாக்கெடுப்பு | கட்சிக்குழுக் கூட்டம் |
| --- | --- |
| Primaries | Caucuses |
| வாக்காளர்கள் நேரடியாக எந்த வேட்பாளரை விரும்புகிறோம் என்று வாக்களிப்பது | கட்சி உறுப்பினர்கள் சிறந்த கட்சி வேட்பாளர் என்று அவர்கள் கருதும் நபர்களை சந்தித்து, விவாதித்து, வாக்களிக்கின்றனர் |



**ஜனாதிபதித் தேர்தலுக்கு முன், மாநில அளவில் அரசியல் கட்சிக் கூட்டங்கள் நடைபெறும். இந்தக் கூட்டங்களில் கட்சியின் சார்பில் களத்தில் குதிக்க ஆசைப்படுகிறவர்கள் தங்களுடைய கொள்கைகள், நிலைப்பாடுகள், திட்டங்கள், வியூகங்களை ஆதரவாளர்கள் மத்தியில் விரிவாக எடுத்துக்கூறி ஆதரவு கோருவார்கள். எந்த வேட்பாளரை ஆதரிப்பது என கட்சி உறுப்பினர்கள் இந்தக் கூட்டங்களில் முடிவு செய்வர்.**

## கட்சிக் குழுக்கூட்டம் (Caucus):

அரசியல் கட்சிகளால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு கட்சிக்குழுக்கூட்டம் **(Caucus)** என்பது ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சியின் ஆதரவாளர்களின் கூட்டமாகும். அவர்கள் ஒரு ஜனாதிபதித் தேர்தலில் ஒரு வேட்பாளராக அல்லது ஒரு வேட்பாளருக்கு ஆதரவாக இருக்க வேண்டும் என்று நம்புகிறவர்களைத் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுப்பதற்காக கூடுவார்கள். இதனைக் கட்சிகள் மாநில மட்டத்தில் நடத்துகிறார்கள்.

இந்தக் கூட்டங்களில் கட்சியின் சார்பில் களத்தில் குதிக்க ஆசைப்படுகிறவர்கள் தங்களுடைய கொள்கைகள், நிலைப்பாடுகள், திட்டங்கள், வியூகங்களை ஆதரவாளர்கள் மத்தியில் விரிவாக எடுத்துக்கூறி ஆதரவு கோருவார்கள். கட்சிக் குழுக்கூட்டம் **(Caucus)** நடக்கும் நாளில் கட்சியின் ஆதரவாளர்கள் தங்களுக்குள் வாய்ப்புடைய வேட்பாளர்களின் தகுதி, திறமைகளை அலசும் வகையில் வாதவிவாதங்களின் மூலம் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வார்கள். ஆயத்தச் சுற்றுகளில், இப்பிரதிநிதிகள் ஒன்றிணைந்து தங்களது வேட்பாளர்களுக்கு ஆதரவைத் தெரிவிப்பார்கள். வேட்பாளரின் பெயர் வாசிக்கப்படும் பொழுது கையை உயர்த்தியோ, அல்லது அவருடன் குழுமி நின்றோ தங்களது நிலைப்பாட்டை வெளிப்படுத்துவர். அதன்பிறகு வாக்குகளின் மூலமாக தங்களின் தெரிவுகளைப் பதிவு செய்வார்கள்.

அந்த வாக்குகளை எண்ணி முடிந்தவுடன், வேட்பாளர் குழுத் தலைவர்கள், தங்கள் வேட்பாளர்களைப் பற்றி உயர்வாகப் பேசி, குறைந்த வாக்குகள் பெற்ற வேட்பாளர்களின் ஆதரவாளர்களைத் தங்கள் வேட்பாளருக்கு ஆதரவளிக்கும்படி வேண்டுவார்கள்.

அப்பொழுது வாக்காளர்கள் தாங்கள் முதலில் யாருக்கு வாக்களித்தார்களோ, அவரை விட்டுவிட்டு, மற்றவர் பக்கம் சேர்ந்து கொள்வதும் நடக்கும். அதாவது தங்கள் கட்சியிலேயே ஒரு வேட்பாளரை விட்டுவிட்டு, இன்னொரு வேட்பாளருக்குத் தங்கள் ஆதரவை நல்குவது தான் அது.

இப்படிப் பலமுறை செய்து, ஒருமுடிவுக்கு வருவதற்கு சிலமணி நேரம் பிடிக்கும். அதனால் கட்சிக் குழுக்கூட்டத்திற்கு **(Caucus)** மிகவும் குறைவானவர்களே வருவார்கள். இதை மனதில்கொண்டு, எந்த வேட்பாளர் தங்கள் ஆதரவாளர்களைக் கட்சிக் குழுக்கூட்டத்திற்கு **(Caucus)** வரவழைப்பதில் வெற்றி காணுகிறார்களோ, அவர்களே அந்த மாநில கட்சிக் குழுக்கூட்டத்தில் **(Caucus)** வெற்றி பெறுவது வழக்கமாக இருந்து வருகிறது.

இதனால்தான் 2016 இல் நடந்த கட்சிக் குழுக்கூட்டங் **(Caucus)** களில், ஆதரவாளர்களைத் திரட்டி வரவழைப்பதில் வெற்றிகண்ட ஜனநாயகக்கட்சியைச் சேர்ந்த பெர்னி ஸான்டஸ்ஸும் **(Benie Sanders)**, குடியரசுக்கட்சியைச் சேர்ந்த டெட் க்ரூஸ்ஸும் **(Ted Cruz)** கட்சிக் குழுக்கூட்டம் **(Caucus)** நடந்த மாகாணங்களில் தத்தம் கட்சி வாக்குகளை அதிகம் பெற்றார்கள். ஹிலாரி கிளின்டனும், டொனல்ட் ட்ரம்பும் அந்த மாகாணங்களில் தோல்வியைத் தழுவினார்கள். கட்சிக் குழுக்கூட்டங்கள் **(Caucus)** கட்சியினாலேயே நடத்தப்படுகின்றன. ஆனால் முதல்நிலை வாக்கெடுப்பு **(Primaries)** மாநில அரசுகளினால் நடத்தப்படுகின்றன.

## முதல்நிலை வாக்கெடுப்பு (Primaries)

ஒரு முதல் நிலை வாக்கெடுப்பில் கட்சி உறுப்பினர்கள் நேரடியாக எந்த வேட்பாளரை விரும்புகிறோம் என்று வாக்களிப்பது இது எளிதானது. வேட்பாளர்களின் பெயர்கள் வாக்குச்சீட்டில் இருக்கும். நமக்கு யார் வேண்டுமோ, அவருக்கு வாக்களிக்கலாம்.

இது ஒரு பொதுத் தேர்தலைப் போன்று ஒரு வேட்பாளரைத் தேர்ந்தெடுப்பதற்கான ஒரு முறை இது மாநில அரசு நடத்திய ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட மாநிலம் தழுவிய நிகழ்வாகும், அங்கு வாக்காளர்கள் தாங்கள் தேர்ந்தெடுக்கும் வேட்பாளருக்கு இரகசிய வாக்குச்சீட்டை அளிக்கின்றனர். பெரும்பான்மை வாக்குகளைப் பெறுபவர் வெற்றி பெறுவார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் நடைபெறும் முதன் நிலை வாக்கெடுப்பு பொதுவாக இருவகைப்படும். ஒன்று மூடிய முதன் நிலை வாக்கெடுப்பு **(Closed Primaries),** மற்றையது திறந்த முதன் நிலை வாக்கெடுப்பு **(Open Primaries)** ஆகும்.

## மூடிய முதன் நிலை வாக்கெடுப்பு (Closed Primaries)

பொதுவாக, மூடிய முதன் நிலை **(Closed Primaries)** வாக்கெடுப்பு ஒன்றில் வாக்களிக்க விரும்பும் வாக்காளர் முதலில் பதிவு செய்யப்பட்ட கட்சி உறுப்பினராக இருக்க வேண்டும். பொதுவாக, வாக்காளர் தனது வாக்காளர் பதிவு விண்ணப்பத்தில் ஒரு

முதன்நிலை வாக்களிப்புத் தேர்தல் வாக்குச்சீட்டு




கட்சியுடன் இணைவார்.

இப்படிப்பட்ட முறை மற்ற கட்சிகளின் உறுப்பினர்களின் கட்சி மாறல் **(cross-ove)"** வாக்களிப்பைத் தடுக்கிறது. சுயாதீன அல்லது கட்சியுடன் இணைக்கப்படாத வாக்காளர்கள், வரையறையின்படி, கட்சி வேட்பாளர்களை நியமிக்கும் போட்டிகளில் பங்கேற்பதில் இருந்து விலக்கப்படுகிறார்கள். இந்த அமைப்பு பொதுவாக ஒரு வலுவான கட்சி அமைப்புக்கு பங்களிக்கிறது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.எஸ்.தீவிரவாதிகள் நாடு திரும்பிய தகவல்கள் உண்மையில்லை

## என்கிறார் சவேந்திரசில்வா

(கொழும்பு)


ஐ.எஸ்.தீவிரவாதிகள் நாடு திரும்பியுள்ளதாக வெளியான தகவல்களில் உண்மையில்லை என இராணுவம் தெரிவித்துள்ளது.

பிரித்தானியாவின் சன் என்ற செய்தித்தாள் ஐ.எஸ்.தீவிரவாத அமைப்பில் இணைந்து கொண்ட இலங்கையர்கள் சிலர் மீளவும் நாடு திரும்பியுள்ளதாக செய்தி வெளியிட்டிருந்தது.

எவ்வாறெனினும் இந்த செய்தியில் உண்மையில்லை என இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திரா சில்வா தெரிவித்துள்ளார்.

ஐ.எஸ்.தீவிரவாதிகள் நாட்டுக்குள் பிரவேசிக்க அனுமதிக்கப்படாது என இராணுவத் தளபதி மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

# ஆலய வழிபாடு ஏன்–எதற்கு – எப்படி



## அதிகார நந்தி அனுமதி

(தொடர்ச்சி)

இப்படி சர்வ வல்லமை படைத்த நந்தியை நாம் மனம் உருகி வழிபட வேண்டும். "சிவத்தியானம் செய்யும் மகாவித்துவானாகிய நந்தியே...மகாதேவனை தரிசனம் செய்ய எனக்கு அனுமதி கொடு" என்று மார்புக்கு நேராக கரம் குவித்து வழிபடுதல் வேண்டும். இல்லையெனில் "நந்தியெம் பெருமானே...பிறவா யாக்கைப் பெரியோனும் தனக்குவமை இல்லாதவனும் எல்லாம் வல்லவரும் முழு முதல் பொருளுமாகிய சிவபெருமானை வழிபட அனுமதி வேண்டுகிறேன். ஈசனின் திருவருள் கிடைக்க எனக்கு உதவி செய்யுங்கள் அய்யனே" என்று கூறி வழிபடலாம்.

மொத்தத்தில் சிவபெருமானை வழிபட நந்திகேசுவரரிடம் அனுமதி பெற வேண்டியது அவசியமாகும். நந்திகேசுவரர் ஆசீர்வாதத்துடன்தான் நாம் கருவறை பகுதிக்குள் காலடி எடுத்து வைக்க வேண்டும் என்பது காலம் காலமாக மரபாக உள்ளது. எனவே நந்தியிடம் அனுமதி பெறாமல் உள்ளே நுழையக் கூடாது.

நந்தியிடம் மனம் விட்டு பேசி அனுமதி பெற்று வருபவர்களிடம் ஈசன் அருள் நிலைக்கும் என்பது நம்பிக்கை. அந்த அளவுக்கு நந்தியை சிவபெருமான் தனக்கு நிகரான இடத்தில் வைத்துள்ளார்.

உலகில் உள்ள எல்லா உயிர்களையும் ஒரு காலத்தில் ஓய்வு எடுக்க வைப்பதற்கு "மகா சம்காரம்" என்று சொல்வார்கள். இந்த சம்காரம் நடந்தால் உலகில் எந்த உயிரினமும் இருக்காது.

அதன்பிறகு புதிதாக உயிரினம் தோன்ற வேண்டும் அல்லவா? இதற்கான அதிகாரத்தை நந்தியிடம்தான் சிவபெருமான் ஒப்படைத்துள்ளார். இப்போது புரிந்து விட்டதா...? நந்திகேசுவரர் எவ்வளவு பவர்புல்லான அவதாரம் என்று. எனவே நந்தியிடம் சரணாகதியாகி உங்களை ஒப்படைத்து விடுங்கள்.

நந்திக்கு "ருத்ரன்" என்றும் ஒரு பெயர் உண்டு. ருத் என்றால் துக்கம். ரன் என்றால் ஓட்டுகிறவன் என்று பொருள். நம்மிடம் உண்டாகும் துக்கத்தை விரட்டுபவர் நந்தியே.

இவரை பிரதோஷ காலத்தில் வழிபடுவது கூடுதல் பலன்களைப் பெற்றுத் தரும். பிரதோஷ நேரத்தில் ஈசனையும் நந்தி தேவரையும் துதிப்பதால் ஆயிரம் அசுவமேத யாகம் செய்த பலன்கள் கிடைக்கும்.

பிரதோஷ காலத்தில் நந்தி பெருமானின் கொம்புகள் நடுவே நின்ற சிவபெருமான் ஆனந்த தாண்டவ நடனம் ஆடுவார். அப்போது நாம் நந்தியை வழிபட்டால் மிகுந்த புண்ணியம் சேரும்.

பொதுவாக ஆலயத்துக்குச் செல்லும் போது நாம் மூலமூர்த்திக்கு மட்டுமே மலர்கள் எடுத்துச் செல்கிறோம். நந்தியை ஒரு கும்பிடு போட்டுவிட்டு போய் விடுகிறோம்.

அப்படி செய்யாமல் நந்திக்கு மிகவும் பிடித்த அறுகம்புல் வாங்கி அவருக்கு சூடி வணங்கினால் நந்தியெம்பெருமான் மிகவும் மகிழ்ச்சி அடைந்து நாம் கேட்கும் வரங்களை நமக்கு குறைவின்றி தருவார். நந்திகேசுவரரை நெய் தீபம் ஏற்றி வழிபடுவது மிகவும் நல்லது. வில்வ தளங்களால் அவரை அர்ச்சிக்கலாம். வெல்லம் கலந்த அரிசியை அவருக்கு நிவேதனமாக படைக்கலாம். பூஜை முடிந்த பிறகு அந்த வெல்லம் கலந்த அரிசியை ஆலயத்துக்குள் இருக்கும் பக்தர்களுக்கு விநியோகம் செய்யலாம்.

சாண்டில்ய முனிவர் நந்தி மீது ஒரு காயத்ரி பாடியுள்ளார். அதை அவர் முன்னிற்கும் போது உச்சரித்தால் நீங்கள் விரும்புவது எல்லாம் நிறைவேறும்.

கடம்பவன புராணத்தில் நந்தியை வழிபடுவதால் கிடைக்கும் பலன்கள் என்னென்ன என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

- கல்வியில் மேன்மை உண்டாகும்.
- செல்வம் பெருகும்.
- கடன் தொல்லை நீங்கும்.
- வறுமை விலகும்.
- வியாதிகள் குணமாகி முழு உடல் நலம் பெறலாம்.
- மனதில் உள்ள தேவையற்ற பயம், பீதி போய்விடும்.
- துன்பங்கள் துவண்டு போகும்.

நந்தியை வழிபட்டால் இவையெல்லாம் கிடைக்கும். அதோடு ஈசனை நெருங்கும் பாக்கியம் உண்டாகும்.

இதைவிட நமக்கு வேறு என்ன வேண்டும்? எனவே அடுத்தமுறை சிவாலயத்துக்குள் செல்லும்போது மறக்காமல் நந்தியிடம் பேசுங்கள்.

நந்தி வழிபாடு முடிந்ததும் ஆலயத்தின் கன்னி மூலைக்கு செல்ல வேண்டும். அங்கு இருக்கும் கன்னி மூல கணபதியை வழிபட வேண்டும். முதல் கடவுளான விநாயகர் வழிபாடு பற்றி அடுத்துக் காணலாம். (முற்றும்)

# செய்தித்துளிகள்

## சிவிலில் பொலிஸார்; மக்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

முகக் கவசம் அணியத் தவறிய மற்றும் சமூக இடைவெளியை பின்பற்றத் தவறிய குற்றச்சாட்டுக்காக நேற்றுக் காலை 6 மணியுடன் நிறைவடைந்த காலப் பகுதியில் 21 பேர் கைது செய்யப்பட்டனர்.

கடந்த ஒக்டோபர் 29 ஆம் திகதி முதல் இது தொடர்பான குற்றச் சாட்டின் கீழ் மொத்தம் 158 நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹன தெரிவித்தார்.

தனிமைப்படுத்தல் சுகாதார உத்தரவுகளை அமுல்படுத்துவதற்காக நாடு முழுவதும் சிவில் உடையில் பொலிஸார் கண்காணிப்பு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## 51 பேர் நாட்டிற்கு

(கொழும்பு)

மத்திய கிழக்கின் இரு நாடுகளிலிருந்து மொத்தம் 51 இலங்கையர்கள் நேற்று கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

அதன்படி 31 இலங்கையர்கள் டோஹாவிலிருந்தும் 20 இலங்கையர்கள் ஓமானிலிருந்தும் நேற்றுக் காலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

விமான நிலையத்தை வந்தடைந்த அனைவரும் பி.சி.ஆர். சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன், தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டனர். (ஜ-4)

## கைதிகள் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

பழைய போகம்பறை சிறைச்சாலையில் நேற்றுக் கைதிகள் சிலர் கூரை மீது ஏறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த கைதிகள் தங்களுக்கு பி.சி.ஆர்.பரிசோதனைகள் நடத்த வேண்டுமெனக் கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக சிறைச்சாலை ஆணையாளர் தெரிவித்தார். (ஜ-4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 80 | 100 | 140 |
| உருளைக்கிழங்கு | 150 | 120 | 150 |
| பச்சைமிளகாய் | 140 | 120 | 150 |
| தக்காளி | 80 | 90 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 90 | 60 |
| கோவா | 60 | 100 | 120 |
| கரட் | 100 | 190 | 240 |
| பூசணி | 60 | 50 | 80 |
| புடோல் | 50 | 70 | 80 |
| வாழைக்காய் | 50 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 250 | 220-300 | 320 |
| பெரிய வெங்காயம் | 160 | 140 | 160 |
| பாகற்காய் | 200 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 50 | 50 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 120 |
| பயற்றங்காய் | 120 | 130 | 200 |
| லீக்ஸ் | 60 | 90 | 100 |
| பீற்றூட் | 80 | 80 | 100 |
| கறிமிளகாய் | 180 | 240 | 300 |
| முருங்கைக்காய் | 200 | 180 | 200 |
| போஞ்சி | 150 | 160 | 240 |
| கத்தரிதம்புள்ள | 80 | 120 | 120 |
| கீரை - 1 பிடி | 40 | 30 | 60 |
| தேசிக்காய் | 200 | 200 | 240 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 65-75 | 60-80 |
| இராசவள்ளி | 250 | 220 | 250 |
| வெங்காயப்பூ | 250 | -- | — |
| முள்ளங்கி | 60 | 80 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 40 |
| வல்லாரை | 15 | 20 | 40 |
| ஈரப்பலா | 60 | — | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## கைமேல் பலன் கிடைத்தது



அரசன் ஒருவன் சகுனங்களில் ஆழ்ந்த நம்பிக்கை உடையவன். அரண்மனை ஜோதிடர் இந்த நம்பிக்கை மேல் குளிர் காய்ந்து கொண்டிருந்தார்.

ஒரு நாள் ஜோதிடர் "அரசே, அதிகாலை எழுந்தவுடன் இரண்டு காக்கைகளை ஒன்றாகப் பார்த்தால் நாள் சிறக்கும்" என்றார்.

மன்னன் சேவகனை அழைத்து காலையில் எங்கேயாவது இரண்டு காக்கைகள் தென்பட்டால் சொல் என்று கட்டளையிட்டான். சேவகன் தினமும் பொழுது விடியும் முன்பே தெருவிற்குச் சென்று விடுவான்.

ஒரு நாள் அரண் மனைக்குப் பக்கத்துத் தெருவில் இரண்டு காக்கைகள் ஒன்றாக அமர்ந்திருப்பதைக் கண்டான்.

“அடடா! நல்ல சகுனம். இன்று மன்னர் நமக்கு நிச்சயம் பதவி உயர்வு கொடுப்பார் என்று மகிழ்ச்சியுடன் மன்னரிடம் சென்று விபரம் சொன்னான்.

இதைக் கேட்ட மன்னன் சேவகனுடன் அந்த இடத்திற்குச் சென்றான். அதற்குள் ஒரு காக்கை போய் விட்டது.

மன்னனுக்கு மூக்கின் மேல் கோபம் வந்து விட்டது. தளபதியை அழைத்து “இந்தப் பொறுப்பற்ற சேவகனுக்குப் பத்து கசையடி கொடு" என்று உத்தரவிட்டான்.

சேவகன் சிரிக்க ஆரம்பித் தான். மன்னனுக்கு கோபம் அதிகமானது. ஏன் சிரிக்கிறாய் என்று சொல்லாவிட்டால் இன்னமும் பத்து கசையடி கொடு என்று உறுமினான்.

சேவகன் சொன்னான். “மகா மன்னரே. இன்று நான் மட்டும்தான் அதிகாலையில் இரட்டைக் காக்கைகளைப் பார்த்தேன்.

கை மேல் பலன் கிடைத்து விட்டது அல்லவா?“ என்றான்.மன்னருக்கு அப் போது தான் சகுனம் பார்ப்பது தவறு என்று உரைத்தது.

## மகா அலெக்சாண்டரின் வரலாறு

### ஆசான் அரிஸ்ரோட்டில்

23



நிம்ப்ஸ் ஆலயம்

பெரிய பெரிய பாறாங்கற்களின் மீது அமர்ந்து தான் பாடம் கற்றுக் கொள்ளவேண்டும். அமர்வதற்கு ஒரு கல்.

உடைமைகள் மற்றும் பாடப்புத்தகங்களை வைத்துக் கொள்வதற்கு தனியாக ஒரு கல். மாணவர்களுக்கு எதிர்த்திசையில் அரிஸ்ரோட்டில் அமர்ந்திருப்பார்.

இசை, ஓவியம் போன்ற கலை தொடர்பான விடயங்கள் எல்லாம் அகாடமியில் கற்றுத் தரப்பட்டன. இலக்கியத்தோடு சேர்த்து இலக்கணங்களையும் கற்றுக்கொண்டான் அலெக்சாண்டர்.

உடலமைப்பு பக்குவமாக இருக்கவேண்டும் என்பதற்காக ஜிம்னாஸ்டிக்ஸ் பயிற்சிகளைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கற்றுக் கொடுத்தார் அரிஸ்ரோட்டில்.

அதனைக் கற்றுக் கொள்ளத் தொடங்கிய புதிதில் அவனுக்கு நிறைய காயங்கள் ஏற்பட்டன.

காயங்கள் படத்தான் செய்யும். எதிர்கால நன்மைக்காகப் பொறுத்துக் கொள் என்று அரிஸ்ரோட்டில் கூறியிருந்ததால் எவ்வளவு பெரிய காயம் ஏற்பட்டாலும் அவன் பெரிதாக அலட்டிக் கொள்வதில்லை.

வெறும் கரித்துண்டை மட்டுமே வைத்து எப்படியெல்லாம் ஓவியத்தில் வித்தை காட்டுவது என்பதைக் கற்றுக் கொடுத்தார் அரிஸ்ரோட்டில். அலெக்சாண்டர் ஓவியம் வரைவதிலும் வல்லவனாக மாறினான்.

குருவாக இருந்தாலும் கூட அவருடன் அலெக்சாண்டரால் நெருக்கமாகப் பழக முடிந்தது. படிப்பு விடயங்கள் தவிர பல விடயங்கள் குறித்து தெரிந்து கொள்ள ஆர்வமாக இருந்தான் அலெக்சாண்டர்.

அப்போதுதான் அரிஸ்ரோட்டில் ஒரு சிறந்த மருத்துவர் என்கிற விடயம் அலெக்சாண்டருக்குத் தெரிய வந்தது. உடனடியாக மருத்துவம் தொடர்பான நுணுக்கங்களை மிகுந்த ஆர்வத்துடன் அவரிடமிருந்து கற்றுக் கொண்டான்.

மருத்துவத்திற்கு அடுத்து கொஞ்சம் வரலாறு, கொஞ்சம் புவியியல் என்று சிறிது சிறிதாக அலெக்சாண்டருடைய விடய ஞானத்தைப் பெருக்கும் முயற்சியில் வெற்றிகரமாகச் சென்று கொண்டிருந்தார் அரிஸ்ரோட்டில்.

அதற்கடுத்ததாக அலெக்சாண்டரின் எதிர்கால அரசியலுக்கும் ஆட்சி நிர்வாகத்திற்கும் தேவையான ஆளுமைத்தன்மை, திட்டமிடுதல், முடிவெடுக்கும் திறன் எல்லாவற்றையும் ஒவ்வொன்றாகச் சொல்லித் தந்தார் அரிஸ்ரோட்டில்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினம் அன்பை அழிக்கும்; கர்வம் அடக்கத்தைக் கெடுக்கும்; விவேகம் வாழ்வை கொடுக்கும்.
– மகாவீரர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழ் அரசியல் தரப்புகள் விழிப்பாக இருக்க வேண்டும்

தமிழ் அரசியல் தரப்புகளிடையே ஒற்றுமை ஏற்படக்கூடிய வாய்ப்புகள் இருப்பதாகத் தெரியவில்லை.

தேர்தல் அரசியல் என்பது மேலோங்கி நிற்கையில், அனைத்துத் தமிழ் அரசியல் கட்சிகளும் ஒற்றுமைப்படுவதென்பது கடினமான காரியமாகும்.

இதை நாம் கூறும்போது அப்படியானால், தமிழ் அரசியல் கட்சிகளிடையே ஒற்றுமை ஏற்படக்கூடிய வாய்ப்புகள் அறவே இல்லையா? என்று நீங்கள் யாரேனும் கேட்கலாம்.

அவ்வாறு கேட்டால், உண்டு என்பதே நம் பதில்.

ஆனால் தேர்தல் அரசியல், பதவி ஆசை என்ற பற்றைத் துறந்தால் மட்டுமே ஒற்றுமை என்பது சாத்தியமாகும்.

இதை நாம் கூறும்போது இஃது ஒரு போதும் சரிவரப் போவதில்லை என்று நீங்கள் முணுமுணுக்கவே செய்வீர்கள்.

இங்குதான் நாம் ஒரு விடயத்தை கருத்தில் எடுக்க வேண்டும்.

இங்கு தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமை என்பது ஒரு பொது உடன்பாட்டின் கீழ் அமுல்படுத்தப்படுவதே பொருத்தமாகும்.

அதாவது தமிழ் மக்களின் உரிமைக்காகக் குரல் கொடுப்பது, தமிழர் தாயகத்தில் நடைபெறுகின்ற அத்துமீறல்களைத் தடுப்பது, தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்துவது, காணாமல்போனவர்களின் உறவுகளுக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பது, இராணுவ ஆக்கிரமிப்புகளை எதிர்ப்பது என்கின்ற விடயங்களிலேனும் தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றுபடுவது அவசியமாகும்.

இங்கு தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமை என்பது அவர்களின் தேர்தல் அரசியலின் சுயாதீனத்திலோ அன்றி அவர்களின் கட்சிசார் செயற்பாடுகளிலோ எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்த மாட்டாது.

சுருங்கக்கூறின் தேர்தல் அரசியலில் சுயாதீனமாக இயங்குகின்ற ஏற்பாடுகளுடன் தமிழ் மக்களின் நலன்சார் விடயத்தில் தமிழ்க் கட்சிகளை ஒற்றுமைப்படுத்துதல் அல்லது தமிழ்க் கட்சிகள் ஒன்றுபடுதல் என்பது நிதர்சனமாக வேண்டும்.

தமிழ் அரசியல் கட்சிகளின் ஒற்றுமை என்பது எந்த வகையிலும் சாத்தியப்படாமல் போகுமாயின், அதன் பாதிப்பை தமிழ் மக்கள் அனுபவிப்பது தவிர்க்க முடியாததே.

உதாரணத்துக்கு அரச காணிகளை இளம் தொழில் முயற்சியாளர்களுக்கு வழங்குகின்ற வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது.

இங்கு தமிழர் தாயகத்தில் உள்ள அரச காணிகள் தமிழ் இளைஞர்களுக்கே வழங்கப்பட வேண்டும் என்பதை தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றுபட்டு ஒற்றுமையாக வலியுறுத்த வேண்டும்.

தவிர, இது தொடர்பில் முன்கூட்டியே ஜனாதிபதி மற்றும் பிரதமரைச் சந்தித்து மேற்போந்த கோரிக்கையை முன்வைப்பது வில்லங்கத்தைத் தடுப்பதற்கு அவசியமாகும் என்பது நம் தாழ்மையான கருத்து.

### இரட்டை படுகொலை வழக்கு

## தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் செயலாளர் பிரசாந்தன் கைது

### சாட்சியங்களை அச்சுறுத்தினாராம்

(மட்டக்களப்பு)

பிள்ளையானின் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் பூ.பிரசாந்தன் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஆரையம்பதியிலுள்ள அவரது வீட்டில் வைத்து நேற்றுக் காலை அவர் கைது செய்யப்பட்டள்ளார்.

ஆரையம்பதியில் இடம்பெற்ற இரட்டைக் கொலை தொடர்பில், சாட்சியங்களை அச்சுறுத்திய குற்றச்சாட்டில் இவர் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மட்டக்களப்பு ஆரையம்பதிப் பகுதியில் 2008 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 29ஆம் திகதி பாடசாலை ஆசிரியரான தமிழ்நாடு என அழைக்கப்படும் கிருஸ்ணபிள்ளை மனோகரன் உட்பட இருவர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இது தொடர்பாக கிருஸ்ணபிள்ளை மனோகரனின் சகோதரியொருவர் காத்தான்குடி பொலிஸாருக்கு வழங்கிய வாக்குமூலத்தை அடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், பூபாலப்பிள்ளை பிரசாந்தன் மற்றும் அவரது சகோதரர் ஹரன் ஆகியோர் காத்தான்குடி பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தற்போது சாட்சியங்களை பிரசாந்தன் அச்சுறுத்தவதாக, கொலையுண்டவரின் சகோதரி வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில், சட்டமா அதிபரின் உத்தரவிற்கமைய பிரசாந்தன் கைதாகியுள்ளார்.

(ம-3)

## சந்தேக நபருக்கு விளக்கமறியல்

(கரணவாய்)

ஹெரோயின் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை எதிர் வரும் 24ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி சைலவன் காயத்ரி உத்தரவிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் புதன்கிழமை நெல்லியடி நகர்ப் பகுதியில் வைத்து கரவெட்டி பகுதியைச் சேர்ந்த சந்தேக நபர் ஒருவர் ஹெரோயின் போதைப் பொருளுடன்நெல்லியடி பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

அவரை அன்றைய தினமே நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட போது விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (5-4-60)

### மன்னார் மாவட்டத்தின்

## புதிய அரச அதிபராக நந்தினி நியமனம்

(மன்னார்)

மன்னார் மாவட்ட புதிய அரசாங்க அதிபராக நந்தினி ஸ்ரான்லி டிமெல் நியமிக்கப்பட்டுள்ளார்.

மன்னார் மாவட்டத்தின் "வீரப் பெண்மணியாக" கருதப்படும் இவர் எதிர் வரும் 16 ஆம் திகதி தனது கடமையைப் பொறுப்பேற்கவுள்ளார்.

இவர் கடந்த 1995 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் மன்னார் கமநல சேவை திணைக்கள உதவி ஆணையாளராகவும், மன்னார் பிரதேச செயலாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

அதுமட்டுமின்றி மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராகவும், தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் மேலதிக செயலாளராகவும், வடமாகாண சபையின் பிரதி பிரதம செயலாளராகவும் கடமையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

கொன்றால் பாவம் தின்றால் தீரும் என்ற பழமொழிக்கு மற்றவர்கள் சொல்லுகின்ற பொருள் பிழையானது. கொல்லுகின்றவன் விலை கொடுத்து வாங்கித் தின்பவனுக்காகவே செய்கின்றான். ஆகவே அப்பாவம் முழுவதும் அவனையே சேராது.

தினற்பொருட்டால் கொல்லாது உலகெனின் யாரும்
விலைப்பொருட்டால் ஊன் தருவார் இல். -குறள்

(தொடரும்)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2020

"குழந்தைகளற்றவர்கள் நம்பிக்கையற்ற வாழ்வை எதிர்கொள்வதைப் போல மரங்களற்ற நாடும் பெரும்பாலும் உதவிகளற்றதாகவே காணப்படும்."

-தியோடர் ரூஸ்வெல்ற் (அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி)

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### பொறாமையை அல்லது பகைமையை வெல்வது எப்படி?

அவர்களுடைய உணர்ச்சிகள் தற்காலிகமானவை தான் என்பதை அறியவும்.

பிறரின் பொறாமையை ஒரு பொருட்டாகவே மதிக்காமல் இருப்பது தான் சிறந்த வழி.

பிறருடைய உணர்வை உண்மை என்று நீங்கள் எண்ணினால் அது உங்களின் அறியாமையைத்தான் வளர்க்கும்.

உணர்ச்சிகளும் மனக்கிளர்ச்சிகளும் நிலையாக இல்லாதது கடந்து செல்லும் மேகக் கூட்டத்தைப் போன்றவை என்பதை அறியவும்.

உங்கள் திறமைகளை அவர்களிடம் காட்ட வேண்டாம்.

அவர்கள் வெறும் பொம்மைகளே. அவர்களும் பழங்களைப்போல் அழியப் போகிறவர் களே. ஆனால் சற்றே நீண்ட ஆயுளுக்குப் பிறகு. (சிரிப்பு)

எதுவுமே பயனளிக்கவில்லை என்றால் எல்லாவற்றையும் மறந்துவிட்டு பேசாமல் தூங்கி விடுங்கள். (முற்றும்)

## அறிந்துகொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### அழகன் முருகப்பெருமானின் ஆயுதங்கள்

**சுருவம்**

இது யாகத்தீயில் நெய்யிடுவதற்குப் பயன்படுவது. "ஒரு முகம் அந்தணர் வேள்வி ஓர்க்குமே" என்று திருமுருகாற்றுப்படையில் நக்கீரர் குறிப்பிடுவதற்கு ஏற்ப 'அக்னிஞாத சுப்ரமணியர்' என்ற கோலத்தில் தெய்வீக யாகாக்னியை வளர்ப்பதற்கு ஒரு கரத்தில் சுருவமும், மற்றொரு கரம் ஒன்றில் நெய் (ஆஜ்ய) பாத்திரமும் கொண்டுள்ளார். இவ்வடிவம் இரண்டு முகங்களும், எட்டு கரங்களும் கொண்டுள்ள ஓர் அபூர்வமான அமைப்பாகும்.

'காங்கேய சுப்ரமணியர்' என்ற வடிவில் ஒரு கரத்தில் பூரண கும்பம் ஏந்திய அமைப்பிலுள்ளார். வேதாரண்யம் அருகிலுள்ள கோடிக்கரை என்ற தலத்திலுள்ள 'அமிர்த கரை சுப்ரமணியன்' என்ற கோலத்தில் ஒரு கரத்தில் அமிர்த கலசம் ஏந்தி உள்ளது ஓர் அற்புதமான வடிவமாகும்.

அப்பெருமானை வழிபட்டு அமுதக் கலசத்தில் உள்ள ஞானத்தேனமுதைப் பெறலாம். (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருப்பெயர்ச்சிப் பலன்கள்

## 15.11.2020-13.11.2021

## இரண்டில் வந்தது குரு பகவான், இனி வெற்றிக் கொடி பறக்கும்!



விருச்சிக இராசி வாசகர்களே!

இதுவரை உங்கள் இராசிக்கு 2 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த குரு பகவான், 15.11.2020 அன்று மூன்றாமிடத்திற்கு வருகின்றார். '3 ஆம் இடத்தில் குரு வரும்பொழுது முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்' என்பார்கள். 3 ஆம் இடத்தில் குரு நீச்சம் பெற்றாலும், அவர் பார்வை பதியும் இடங்கள் சிறப்பாக அமைவதால் சந்தோசங்களையே நாளும் சந்திக்கக்கூடிய வாய்ப்பு உண்டு. தொழில் வளர்ச்சியும், திருப்திகரமான வருமானமும் ஏற்படும். உடன் பிறப்புகள் உங்களுக்கு உறுதுணையாக இருந்து நல்ல காரியங்களை முன்னின்று நடத்திக்கொடுப்பர். உங்கள் திறமைக்குரிய அங்கீகாரம் கிடைக்கும். இடையில் குரு பகவான் 4 ஆம் இடத்திற்கும் செல்கின்றார். சில நாட்கள் வக்கிர இயக்கத்திலும் இருக்கின்றார். சுய ஜாதகத்தில் திசாபுத்தி பலம் பெற்றிருப்பவர்களுக்கு தொழில் விருத்தியும், செல்வாக்கும் அதிகரிக்கும். வக்கிர காலத்தில் வாழ்க்கைப் பாதை சீராக, குரு கவசம் பாடி, குரு பகவானை வழிபடுவது நல்லது.

**குருவின் பார்வை பலன்**

இந்தக் குருப்பெயர்ச்சியின் விளைவாக, குரு பகவான் உங்கள் இராசிக்கு 7, 9, 11 ஆகிய மூன்று இடங்களையும் பார்க்கின்றார். குருவின் பார்வை உங்கள் இராசிக்கு 7 ஆம் இடத்தில் பதிவதால் இல்லறம் நல்லறமாக அமையும். வாழ்க்கையில் வசந்தம் உருவாகும். மனையில் மங்கல ஓசை கேட்கும் வாய்ப்பு உண்டு. தொழில் முன்னேற்றம் அதிகரிக்கும்.

ஏழரைச்சனி விலகும் நேரம் என்பதால் தொட்ட காரியங்களில் எல்லாம் வெற்றி கிடைக்கும். வெளிநாட்டிலிருக்கும் உறவினர்கள் அல்லது நண்பர்கள் மூலம் அனுகூலமான தகவல் வந்து சேரும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு வீடு, வாகனங்கள் வாங்க உதவி கேட்டு விண்ணப்பித்திருந்தால், நல்ல பதில் இப்பொழுது கிடைக்கும்.

குருவின் பார்வை 9 ஆம் இடத்தில் பதிவதால் பாக்ய ஸ்தானம் பலம் பெறுகின்றது. எனவே, எந்த எந்த நேரத்தில் செய்ய வேண்டுமென்று நினைத்தீர்களோ அதை அந்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். தந்தைவழி உறவு வலுப்பெறும். தீர்த்த யாத்திரைகள், தெய்வ வழிபாடுகள் போன்றவற்றில் நம்பிக்கை அதிகரிக்கும். முன்னோர்கள் கட்டி வைத்த ஆலய திருப்பணிகளை முறையாகக் கவனித்து, மக்கள் சேவையின் மூலம் மகத்தான புகழைப் பெறுவீர்கள். பிள்ளைகளின் மேற்படிப்பு சம்பந்தமாக எடுத்த முயற்சி வெற்றி பெறும். 'படித்து முடித்த படிப்பிற்கேற்ற வேலை இல்லையே' என்று கவலைப்பட்டவர்களுக்கு, இப்பொழுது எதிர்பார்த்த வாய்ப்பு கிடைக்கும்.

குருவின் பார்வை 11 ஆம் இடத்தில் பதிவதால், லாப ஸ்தானம் புனிதமடைகின்றது. தொட்டது துலங்கும். தொழில் வளம் சிறக்கும். பணியாளர்கள் இப்பொழுது உங்களுக்கு பக்கபலமாக இருப்பர். சங்கிலித்தொடர் போல வந்த கடன் சுமை குறையும். புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்து சேரும். பூமி வாங்கும் யோகம் முதல் புதிய தொழில் தொடங்கும் யோகம் வரை எதிர்பார்ப்புகள் அனைத்தும் நிறைவேறும். மூத்த சகோதரத்தின் அனுகூலம் உண்டு.

**நட்சத்திரப் பாதசாரப்படி பலன்கள்**

**உத்தராடம் நட்சத்திரக்காலில் சூரியன் சாரத்தில் குரு சஞ்சாரம்**

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்

**(15.11.2020 முதல் 4.1.2021 வரை)**

உங்கள் இராசிக்கு 10 ஆம் இடத்திற்கு அதிபதியானவர், சூரியன். அதாவது தொழில் ஸ்தானாதிபதியாக விளங்குகிறார். அவரது ஸ்தானத்தில் தன பஞ்சமாதிபதியான குரு பகவான் சஞ்சரிக்கும் பொழுது, தொழில் வளர்ச்சி மிகச்சிறப்பாக இருக்கும். புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்துசேரும். பொருளாதார நிலை உச்சம் பெறும். வாழ்க்கைத் துணைக்கு வேலை சம்பந்தமாக முயற்சி செய்திருந்தால், அதில் வெற்றி கிடைத்து உதிரி வருமானங்களும் வந்து சேரும்.

'பிள்ளைகளுக்கு அரசு வேலை கிடைக்கவில்லையே' என்று கவலைப்பட்டவர்களுக்கு, இப்பொழுது அவர்கள் எழுதும் தேர்வில் வெற்றி கிடைத்து அரசாங்க வேலை கிடைக்கும் யோகம் உண்டு. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு விரும்பிய பதவி உயர்வும், கேட்ட சலுகைகளும் கிடைக்கும். வெளிநாட்டில் பணிபுரிய அழைப்புகள் வரலாம்.

**திருவோணம் நட்சத்திரக்காலில் சந்திரன் சாரத்தில் குரு சஞ்சாரம் (5.1.2021 முதல் 1.3.2021 வரை)**

உங்கள் இராசிக்கு 9 ஆம் இடத்திற்கு அதிபதியானவர் சந்திரன். எனவே அவரது சாரத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது, குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். கடுமையாக முயற்சித்தும் இதுவரை முடிவடையாத காரியங்கள், இப்பொழுது எளிதில் முடிவடைந்துவிடும். அதிகாரப் பதவியில் உள்ளவர்களின் ஆதரவும், அருகில் உள்ள நண்பர்களின் ஆதரவும் கூடுதலாகக் கிடைக்கும் நேரமிது. தொழிலை விரிவு செய்யும் முயற்சி பலன் அளிக்கும். வெளிநாட்டு தொடர்புகளாலும் இலாபம் உண்டு.




என்றைக்கோ குறைந்த விலையில் வாங்கிப் போட்ட சொத்து, இப்பொழுது நினைக்க இயலாத அளவிற்கு விலை உயர்ந்து அதன் விற்பனை மூலம் ஒரு பெரும் தொகை உங்களுக்கு கிடைக்கலாம். எண்ணங்களுக்கு வலிமை தரக்கூடியவர் சந்திரன் என்பதால் இக்காலத்தில் நேர்மறைச் சிந்தனைகளையே அதிகம் நினைப்பது நல்லது.

**அவிட்டம் நட்சத்திரக்காலில் செவ்வாய் சாரத்தில் குரு சஞ்சாரம் (2.3.2021 முதல் 4.4.2021 வரை, மீண்டும் 14.9.2021 முதல் 13.11.2021 வரை)**

உங்கள் இராசிநாதன் செவ்வாய் ஆவார். தைரியகாரகன் என்றும், சகோதர பூமிகாரகன் என்றும் செவ்வாயை அழைப்பது வழக்கம். அவரது சாரத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது, உடல்நலம் சீராகி உற்சாகப்படுத்தும். துணிவும், தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். சகோதரர்களின் ஆதரவு கூடுதலாகக் கிடைக்கும். முன்னோர் வழிச் சொத்துக்களில் இருந்த சிக்கல்கள் தீரும்.

ஆடை, அணிகலன்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். வெளிநாட்டில் இருக்கும் நண்பர்கள் உங்களுக்கு உதவி செய்வதாகச் சொல்வார்கள். உடன் பிறப்புகளின் திருமணங்களை முன்னின்று நடத்தி வைப்பீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு ஊர் மாற்றங்கள், இடமாற்றங்கள் எதிர்பார்த்தபடியே வந்து சேரும். புதிய வாகனங்கள் வாங்கி மகிழும் யோகம் உண்டு.

**அவிட்டம் மற்றும் சதயம் நட்சத்திரக்காலில் செவ்வாய் மற்றும் ராகு சாரத்தில் குரு சஞ்சாரம் (5.4.2021 முதல் 13.9.2021 வரை)**

இக்காலத்தில் கும்ப இராசியில் குரு சஞ்சரிக்கின்றார். அப்பொழுது அவர் பார்வை 8, 10, 12 ஆகிய இடங்களில் பதிகின்றது. குரு பார்வைக்கு பலன் அதிகம் என்பதால், அந்த மூன்று இடங்களுக்குரிய ஆதிபத்யங்களும் முன்னேற்றத்தை வரவழைத்துக் கொடுக்கும். புதிய தொழில் தொடங்கும் திட்டங்கள் நிறைவேறும்.

உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பணி நிரந்தரம் பற்றிய சலுகைகள் வந்து சேரும் கேட்ட இடத்திற்கு இடமாறுதல்கள் கிடைக்கும். பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் கிடைக்கும். பிள்ளைகளின் கல்யாணக் கனவுகளை நனவாக்குவீர்கள். வெளிநாட்டிலிருந்து உத்தியோகம் சம்பந்தமாக அழைப்புகள் வரலாம்.

**குருவின் வக்கிர இயக்கம்**

16.6.2021 முதல் 13.10.2021 வரை குரு வக்கிர இயக்கத்தில் இருக்கின்றார். கும்பம், மகரம் ஆகிய இரண்டு இராசிகளிலும் வக்கிரம் பெறுகின்றார். இந்த வக்கிர காலத்தில் கொஞ்சம் கூடுதல் கவனத்தோடு செயற்படுவது நல்லது. தன பஞ்சமாதிபதியான குரு பகவான் வக்கிரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. பொருளாதாரப் பற்றாக்குறை ஏற்படலாம். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்காது. குடும்பச்சுமை கொஞ்சம் கூடுதலாக இருக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்லுங்கள். உங்களுடைய பொறுப்புகளை மற்றவர்களிடம் ஒப்படைக்க வேண்டாம். அப்படி ஒப்படைத்தால் அது மீண்டும் உங்களிடமே வந்து சேரும். விரயங்கள் அதிகரிக்கும் இந்த நேரத்தில் உங்களுக்கு அதிகம் விழிப்புணர்ச்சி தேவை.

**செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு**

இல்லத்து பூஜை அறையில் விநாயகப் பெருமான் படம் வைத்து, விநாயகர் கவசம் பாடி அவரை வழிபடுவதுடன், சதுர்த்தி விரதம் இருப்பதும் நன்மை தரும். மேலும் வியாழக்கிழமைதோறும் குரு வழிபாட்டை முறையாக மேற்கொண்டால் நீங்கள் நினைத்த காரியம் நினைத்தபடியே நிறைவேறும்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்**

விருச்சிக இராசியில் பிறந்த பெண்களுக்கு, இந்தக் குருப்பெயர்ச்சி சாதகமான பெயர்ச்சியாகவே உள்ளது. பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். புனிதப் பயணங்கள் அதிகரிக்கும். கல்யாணக் கனவுகள் நனவாகும். தம்பதியர் ஒருவரையொருவர் புரிந்து கொண்டு செயற்பட்டு சச்சரவு வளராமல் பார்த்துக்கொள்வது நல்லது. பெற்றோர்களின் ஆதரவு திருப்தி தரும். பிள்ளைகளின் முன்னேற்றம் பெருமை தரும். உங்கள் பெயரிலேயே இடம், பூமி வாங்கும் யோகம் உண்டு. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வோடு கூடிய இடமாற்றம் கிடைக்கும். குலதெய்வ வழிபாடு நன்மை தரும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சனி, ஞாயிறு...

கொரோனா வைரஸ் பரவலை கட்டுப் படுத்தும் நோக்குடன் பண்டிகைக் கால மான சனிக்கிழமை மக்கள் ஒன்றுகூடு வதைத் தவிர்க்க இவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 16ஆம் திகதி திங்கட்கிழமை மீளவும் தொடர்ந்து சேவைகள் ஆரம்பிக்கப் படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## பூசா சிறைச்...

வெலிக்கடை, போகம்பர மற்றும் மாத் தறை சிறைச்சாலைகளில் ஏற்கெனவே கைதிகள் மற்றும் சிறை அலுவலர் களுக்கு கொரோனா தொற்று உறுதியான நிலையில் நேற்று பூசா சிறைச்சாலை கைதிகளுக்கும் கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பூசா சிறைச்சாலையில் தடுத்து வைக் கப்பட்டுள்ள கைதிகளில் மூவருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. (ம-3)

## யாழ்.நகரில்...

முறைகளை மீறி அனுமதி பெறாமல் திரு மண நிகழ்வு நடத்து வதற்கு அனுமதித்த தான குற்றச்சாட்டில் தற்காலிகமாக பூட்டப் பட்டுள்ளது.

சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளை பேணுவதற்காக திருமண நிகழ்வுகளை நடத்துவதற்கு சுகாதார பிரிவின் முன் அனுமதியை பெற வேண்டும்.

எனினும் முன் அனுமதியை பெறா மல், திருமண நிகழ்வை நடத்துவதற்கு இட மளித்ததாக குறித்த ஹோட்டல் நிர் வாகம் மீது குற்றம் சுமத்தப்பட்டு யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பணி மனை யினால் ஹோட்டல் பூட்டப்பட்டுள்ளது. (ம-3)


வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1629 திகதி 2020/11/09
ஆங்கில எழுத்து U வெற்றி இலக்கங்கள் 43 45 51 53

மெகா பவர்
திகதி 12/11/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0671
D 24 20 29 49 63

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 12-11-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2599
ஆங்கில எழுத்து H வெற்றி இலக்கங்கள் 15 40 48 64

மஹஜன சம்பத
திகதி 2020/11/12
சீட்டிழுப்பு இலக்கம் 4304
J 8 7 5 8 1 8

தன நிதானய
திகதி - 2020.11.12
சீட்டிழுப்பு இலக்கம் - 342
B 29 31 33 41
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்


## வீட்டுச் சுவர் சரிந்...

இடிந்து விழுந்ததில் சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளான்.

நேற்றுக் காலை 11 மணியளவில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் 8 வயதுடைய நிரோஜன் றுசாந்தன் என்ற சிறுவனே உயிரிழந்துள்ளார்.

கடந்த சில நாட்களாக பெய்த பலத்த மழை காரணமாக, தற்காலிக வீட்டின் சுவர் ஈரமடைந்த நிலையில் சரிந்து விழுந்துள்ளது. இதில் அகப்பட்டே குறித்த சிறுவன் உயிரிழந்துள்ளான்.

இது குறித்த மேலதிக விசாரணை களை கிளிநொச்சி பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.

(ம-3,100,312,350)

## நெல்லியடியில்...

தங்கச் சங்கிலி வழிப்பறிக் கொள்ளை யர்களால் கொள்ளையிடப்பட்டுள்ளது.

நேற்று வியாழக்கிழமை மதியம் நெல்லியடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இரும்பு மதவடிப் பகுதியில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மேற்படி தம்பதியினர் தீபாவளி தினத் திற்கு புடவைகள் எடுத்துக் கொண்டு மோட் டார் சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டி ருந்தபோது, பிறிதொரு மோட்டார் சைக்கி ளில் அவர்களை பின் தொடர்ந்து வந்த வர்கள் பெண்மணியின் கழுத்திலிருந்த ஒரு பவுண் நிறையுடைய தங்கச் சங் கிலியை .கொள்ளையிட்டுச் சென்றுள்ள னர். (ம-3,60)

## வீட்டிலிருந்து...

முறையில் கொண்டாடுங்கள் என இந்து மதத் தலைவர்கள் கூட்டாக அழைப்பு விடுத்துள்ளார்கள்.

நேற்று மாலை யாழ்ப்பாணம் இந்து மாமன்றத்தில் இடம்பெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு அழைப்பு விடுத்துள்ளார்கள்.

உலகளாவியரீதியில் கொரோனா தாக்கம் அதிகரித்துவரும் நிலையில் இலங்கையிலும் தற்போது தொற்று வீதம் அதிகரித்துக் காணப்படுகின்றது.

இந்த நிலையில் இந்துக்களின் தீபா வளி பண்டிகை கொண்டாடப்பட உள்ளது. அது மட்டுமன்றி இந்துக்களின் விரத நாட் கள் வருகின்றன.

எனவே தற்போதுள்ள நிலைமையை கருத்தில் கொண்டு இந்து மக்கள் தீபா வளியை வீடுகளிலிருந்து ஒன்றுகூடல் களை தவிர்த்து அமைதியாக இறைவனை பிரார்த்திக்க வேண்டும். அமைதியான கொண்டாட்டங்கள் கூட சமூக இடைவெளி முகக் கவசம்அணிதல்போன்றவற்றைபேணி தீபாவளியை கொண்டாடுங்கள் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-3,33)

## வாக்கெடுப்பின்றி...

சட்டமூலத்தின் மூன்றாவது வாசிப்பு நேற்று திருத்தங்களுடன் நிறைவேற்றப் பட்டது.

சட்டமூலம் வாக்கெடுப்பிற்கு விடப்படா மல் நிறைவேற்றப்பட்டது. 2020 ஒதுக் கீட்டு சட்டமூலத்தின் மூன்றாவது வாசிப்பு பிரதமர் மகிந்த ராஜபக்ஷவினால் நேற்று வழங்கப்பட்டது.

எதிர்வரும் நவம்பர் 17ஆம் திகதி பிரத மர் மகிந்த ராஜபக்ஷவினால் 2021க்கான வரவு - செலவு திட்டம் முன்வைக்கப்படும். (ம-3)

## ஊஞ்சல் கயிறு...

ழந்துள்ளார்.

நல்லூர் கோவில் வீதியைச் சேர்ந்த உஜிதன் சாதுரியா (வயது - 7) என்ற சிறு மியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் கடந்த 3ஆம் திகதி ஊஞ்சல் ஆடுவதற்காக மரத்தில் இருந்த ஊஞ்சல் கயிற்றினை கதிரையில் ஏறி எடுக்க முற் பட்டுள்ளார். கயிற்றில் போட்டிருந்த முடிச்சி யினை அவிழ்க்க முற்பட்டபோது கயிறு தவறுதலாக சிறுமியின் கழுத்தில் சிக் குண்டுள்ளது.

வெளியில் வந்த சிறுமியின் தாயார், மகள் கயிற்றில் தொங்கிக் கொண்டு இருப் பதனை பார்த்து உடனடியாக யாழ்ப் பாணம் போதனா வைத்தியசாலையில் சிறுமியை அனுமதித்தார்.

அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிறுமி நேற்று உயிரிழந்துள்ளார்.

மரண விசாரணையினை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3)

## கொரோ...

வைத்திய அதிகாரி பணிமனையின ரால், இறுதி நிகழ் வில் பங்கேற்ற 14 குடும்பத்தினர் தனிமைப்படுத்தப் பட்டுள்ளனர்.

இறுதி நிகழ் வில் மதச் சடங்கு களை மேற்கொண்ட மதகுருவும் தனி மைப்படுத்தப்பட்டுள் ளார். (ம-3)

## +373...

தொற்றுடன் அடை யாளம் காணப்பட் டுள்ளனர்.

இதன் மூலம் மொத்த தொற்றா ளர்களின் எண்ணி க்கை 15 ஆயிரத்து 723 ஆக அதிகரித் துள்ளது.

மினுவாங்கொட- பேலியகொட கொரோனா கொத்தணியுடன் தொடர்புடையவர்களே தொற்றுடன் அடை யாளம் காணப்பட்ட தாக அரச தகவல் திணைக்களம் தெரி வித்துள்ளது. (ம-3)

## கொரோனாவால்...

இதன்மூலம் நாட்டில் கோவிட்-19 நோயால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 48ஆக அதிகரித்துள்ளது.

கொழும்பு-12ஐச் சேர்ந்த 54 வயது டைய ஒருவரும் மீகொடயைச் சேர்ந்த 45 வயதுடைய ஒருவருமே கோவிட்-19 நோய் காரணமாக உயிரிழந்துள்ளனர்.

மினுவாங்கொட - பேலியகொட கொரோனா பரவல் கொத்தணியை அடுத்து கடந்த 5 வாரத்தில் 35 பேர் உயிரிழந் துள்ளனர். (ம-3)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

සංවර්ධන වාසනාව அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 383 திகதி 12.11.2020 வர்ணம் நீலம்
ஆங்கில எழுத்து G வெற்றி இலக்கங்கள் 24 28 34 விதி எண் 2
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 10,631,852
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1274 நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 12.11.2020 தினம் வியாழன்
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்
T 18 19 21 27
SUPER 500 9 8 1 3

ராசி
சுப்பர் ஜக்பொட் 51,21,051/=
திகதி : 12.11.2020
வெற்றி வாரம் : 2981
வர்ணம் : கபிலம்
வெற்றி இலக்கங்கள் 10 16 17 35 மிதுனம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,927,240

அத கோடிபதி ADA KOTIPATHI
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1100
வர்ணம் : நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2020.11.12
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 83,507,270/-
வெற்றி இலக்கங்கள் 08 20 47 63 ஆங்கில எழுத்து H
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா Shanida
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2020.11.12
சீட்டிழுப்பு இல. : 3430
வர்ணம் : சிவப்பு
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 31,886,266.20
வெற்றி இலக்கங்கள் 01 36 38 48 ஆங்கில எழுத்து Y
ரூ 500/- பரிசுக்கான விசேட இலக்கம் 7290
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அதிர்ஷ்டத்தின் ஆசிர்வாதம் NLB யிடமிருந்து
தொடரும் அதிர்ஷ்டங்கள்
வெறும் 20 ரூபாவில்
10 லட்சம்
வெல்லப்பட்டுள்ளது.
எமது விற்பனையில் 8.11.2020 ஞாயிற்றுக்கிழமை
NLB சேவன அதிர்ஷ்ட லாப சீட்டிழுப்பில்
நான்கு இலக்கங்கள் பொருந்தியதில்
(33 36 37 46) ரூபா பத்து லட்சம்
வெல்லப்பட்டுள்ளது.
வெற்றியாளருக்கு வாழ்த்துக்கள்
நா.தயாபரன்
பிரதான முகவர் ( N 22005த)
... நிலையம், சாவகச்சேரி.
(C-667)
H 33 36 37 46
2020-11-08 0311
Rs. 1,000,000/=


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு
## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், மானிப்பாய், உடுவில் றோட்டுடன் ஆனந்த வைரவர் கோவில் சந்திக்கு அருகாமையில் 4 பரப்புக் காணி உள்ளது. **2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.**

இரண்டு பரப்புக் காணியுடன் வீடும் உள்ளது.

( தரகர் தேவையில்லை. ) (4637)

**077 805 1655, 076 640 0974**



## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், பலாலி றோட், கோண்டாவில் சந்திக்கு அருகாமையில் 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

( தரகர் தேவையில்லை. ) (4637)

**077 623 4204**



## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், நீர்வேலி மேற்குக் கரந்தன் குறுக்கு வீதியில் (இராசா கடை அருகாமையில்) இரண்டு பரப்புக் காணி விற்பனைக்கு மற்றும் ஊரெழு ஆனந்தகானம் பகுதியில் 44 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

( தரகர் தேவையில்லை. ) (4637)

**077 805 1655**


## மக்களே அவதானம்!
## கட்டுப்பாடுகளை மீறினால் உடன் கைது

(கொழும்பு)

முகக்கவசம் அணியாமை மற்றும் சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றாமை போன்ற குற்றங்களுக்காக கடந்த 24 மணித்தியாலங்களில் 21 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஒக்டோபர் 29 ஆம் திகதி இது தொடர்பான குற்றச்சாட்டின் கீழ் மொத்தம் 158 நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

குற்றவாளிகள் எனக் கருதப்படும் சந்தேக நபர்களுக்கு 10 ஆயிரம் ரூபா அபராதமும் ஆறு மாத சிறைத் தண்டனையும் விதிக்கப்படும் என்றும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன சுட்டிக்காட்டியுள்ளார். (ம-03)

## நினைவின் மடியில் ஆண்டுகள் ஐந்து



மூதறிஞர்

**சி. சிவசரவணபவன் - (சிற்பி)**

| எம் தோற்றச் சுடரொளியாய் | சொல்லாத துண்ணுணர்வாய் |
|---|---|
| 28.02.1933 | 09.11.2015 |

[திதி 8 ஐப்பசித் திரயோதசி 13.11.2020]

வாழும் இலக்கியங்கள் வைத்தெமக்குத் தான் இறைவன் தாழடைந்தான் நாம் தவிக்கச் சென்று.

Dr. சுப்பிரமணியம் வீதி, கந்தரோடை, சுன்னாகம். (4633)

பிரிவால் துயருறும் மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் ஆசிரியர் திரு. **சோமலிங்கம் காண்டீபராசா** அவர்களின் அன்புத் தந்தை

அமரர்

**வைத்திலிங்கம் சோமலிங்கம்**

அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி அறிந்து துயரடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (C-678)

**ஆசிரியர் கழகம்**
யா/யாழ். இந்து மகளிர் கல்லூரி

## தவறிவிட்டது

வீரபத்திரன் திலீப்குமார் என்பவரது தேசிய அடையாள அட்டை, வங்கி அட்டை, வாகன அனுமதிப்பத்திரம் அடங்கலான பேர்ஸ் 12.11.2020 அன்று மருதங்கேணி மாசாருபளைப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
**(சன்மானம் வழங்கப்படும்.)** (C-677)

**077 205 7538**


## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

UK- 1025 /=Kg

077̈68226240

எமது நேரடிக் கிளைகள்

- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை

(C-505)


## மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 06 – 09 – 1951 | 12 – 11 – 2020 |



## வல்லிபுரம் நவரத்தினம்

கூவில், புலோலி தெற்கு, புலோலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் நவரத்தினம் நேற்று (12.11.2020) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் - இலட்சுமி தம்பதியரின் பாசமிகு இளையமகனும் தங்கராசா (கனடா), சிவராமலிங்கம், திரவியம் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் யோகேஸ்வரியின் உடன் பிறவாச் சகோதரரும் அன்னைரத்தினம் (கனடா), புஸ்பமலர், அற்புதம் (கனடா) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.11.2020) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (C-679)

கூவில், புலோலி தெற்கு, புலோலி. 076 870 4512 தகவல்:- குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



## உஜிதன் சாதுரியா
**( சாது )**

**( தரம் 2, யா/ புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம் )**

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 2013.07.26 | 2020.11.12 |

யாழ்ப்பாணம், கோவில் வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட உஜிதன் சாதுரியா (சாது) நேற்று (2020.11.12) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் உஜிதன் (நிகழ்ச்சித் திட்ட அலுவலர் - தொழிற்பயிற்சி அதிகார சபை (VTA), யாழ்ப்பாணம்) - டினோ ஜெசவிற்றா தம்பதிகளின் அன்பு மகளும் காருண்யா (யாழ். இந்து மகளிர் கல்லூரி), சாத்விகா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற கந்தவனம் (வேலணை) மற்றும் சறோஜினிதேவி, டோமினிக், ஜெயமணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ரவிச்சந்திரன் (நோர்வே), ரவிசங்கர் (கனடா), ரவிச்செல்வன் (கனடா),ஜொய்சி, டிசி (நெதர்லன்ட்), மேரின் (கிராம அலுவலர் - J/77, மருதடி), கௌரி (நோர்வே), கிருபாநிதி (கனடா), கோகிலா (கனடா); எட்மன் ஜெயக்குமார், நிஷாந்தன் (நெதர்லண்ட்), ஜூட்ஜெயக்குமார் (வீதி அபிவிருத்தித் திணைக்களம், யாழ்ப்பாணம் ) ஆகியோரின் பெறாமகளும் அன்ட்று ஜஸ்ரின் (பிரான்ஸ்), காயத்ரி (கனடா), சிறோமா (பிரான்ஸ்), குணசிலன் (கனடா) ஆகியோரின் மருமகளும் கௌசிகன், நிலா, பிரவீன், நீருஜா, தேனுஜா, மிதுஷா, தர்மிதா, காருஷா, ஜெனுக்ஷி, நிதின், சயானா, ஜெமேக்ஷா, ஷெர்விக் ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும் அட்றியான், அனனியா, அன்சிகா, அஸ்வின், தாமிரா ஆகியோரின் மச்சாளும் ஆவார்.

அன்னாரின் இறுதிப் பிரார்த்தனை இன்று (13.11.2020) வெள்ளிக்கிழமை மதியம் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (4636)

இல. 435 /18, கோவில் வீதி, நல்லூர். 077 716 1955 தகவல்:- குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.11.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org